500 Business Cards - Only $25
உங்கள் சகல அச்சுத் தேவைகளுக்கும்...
1345 Morningside ave #8, Scarborough Tel:416-284-9545

இருளிலிருந்து ஒளிக்கு...

# பூபாளம்

www.boobalam.com

Dental Clinic
Dr. Iru VIJAYANATHAN
BDS, MFDS, FAGD,
General Dental Practitioner
3150 Eglinton Ave East Scarborough (Markham & Eglinton)
3351 Markham Road # 129 Scarborough (Markham & Steeles)
416.264.3232 | 416.609.2022

9 கார்த்திகை 2012, 10,000 பிரதிகள் இதழ் 10

# மீண்டும் வென்றார் ஒபாமா!

இறுதி நிமிடம் வரைக்கும் யார் வெல்வாரோ என்ற நிலையில் இருந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் ஒபாமாவின் மயிரிழை வெற்றியுடன் முடிவுக்கு வந்தது. ஒபாமா அறுபது மில்லியன் வாக்குகளைப் பெற்று 50 வீத வாக்குகளையும் றொம்னி 57 மில்லியன் வாக் குகளைப் பெற்று 48 வீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

அமெரிக்க வாக்களிப்பு முறையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் சனத்தொகைக்கும் வேறு காரணிகளுக்கும் ஏற்ப, Electoral college votes எனப்படும் தேர்தல் வாக்குகள் வழங்கப்படுகின்றன. ஒவ் வொரு மாநிலத்திலும் அதிகளவு வாக்குகள் பெறுபவருக்கு அந்த மாநி லத்திற்கான முழுமையான தேர்தல் வாக்குகள் வழங்கப்படுகின்றன. 50 மாநிலங்களுக்கும் மொத்தம் 538 வாக்குகள் உண்டு. 435 பிரதிநிதிகளும் ஐம்பது மாநிலங்களுக்கும் இரண்டு பேர் படி 100 செனட்டர்களும், வாஷிங்டன் உள்ள கொலம்பியா பகுதிக்கு 3 பிரதிநிதிகள் என மொத்தம் 538 பிரதிநிதிகள் அமெரிக்க அரசுக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள். இவர்களின் மொத்த எண்ணிக்கைப்படியே தேர்தல் வாக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 270 வாக்குகளைப் பெறுபவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். அமெரிக்க முறையின்படி, மொத்த வாக்குகளில் பெரும்பான்மை பெற்றவர், இந்த தேர்தல் வாக்குகள் முறையால் தோல்வியுற நேரிடலாம். அல் கோர் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றாலும், ஜோர்ஜ் புஷ் ஜனாதிபதியானது இந்த தேர்தல் வாக்குமுறையினாலேயே.

தற்போதைய தேர்தலில் ஒபாமா ஐம்பது வீத வாக்குகளை மட்டும் பெற்றிருந்தாலும், தேர்தல் வாக்கு முறையில் 303 வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்திருக்கிறார். ஓகையோ மாநிலத்தில் வெற்றி தனக்குக் கிட்டும் என்ற நம்பிக்கையில் றொம்னி கடைசி நேரம் வரைக்கும் தோல்வியை ஒப்புக் கொள்ள மறுத்துக் கொண்டிருந்தார். புளோரிடாவின் எண்ணிக்கையும் தாமதப்பட்டதும் இதற்கு இன்னொரு காரணம். ஆனால், இந்த இரண்டு மாநில வாக்குகளும் கிடைக்காவிட்டாலும், ஒபாமாவின் வெற்றி நிச்சயம் என்ற நிலையில், றொம்னி தோல்வியை ஒப்புக் கொண்டு, ஜனாதிபதி ஒபாமாவிற்கு வெற்றி வாழ்த்துச் சொன்னார்.



வெற்றியை கொண்டாடும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் அவரது மனைவியும். படம் yahoo.com

ஒபாமா மயிர் இழையில் வெற்றி பெற்றாலும், பெரும் சவால்களை எதிர் நோக்கவுள்ளார். அமெரிக்கா காங்கிரஸில் நூறு உறுப்பினர்களில் 52 பேர் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்களா உள்ளதால் பெரும்பான்மையாக உள்ளனர். ஆயினும் பிரதிநிதிகள் சபை இன்னமும் குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதனால் ஒபாமாவின் திட்டங்களை நிறைவேற்றுவதில் பெரும் சிக்கல்கள் உள்ளன. அடைந்த பெருந்தோல்வியின் பின்னர் குடியரசுக் கட்சியினர் தங்களின் தோல்விக்கான காரணங்களைத் தேடிக்கொண்டுள்ளனர். ஸ்பானிய வாக்காளர்களை அன்னியப்படுத்தியமை, கடுமையான பழமைவாதப் போக்கினால் பெண்களையும் மற்றைய சிறுபான்மைக் குழுக்களையும் கோபத்திற்குள்ளாக்கியமை என பல்வேறு காரணங்கள் தற்போது தோல்விக்கு காரணமாகக் கூறப்படுகின்றன.

## பாரிஸ் புலிகளின் பொறுப்பாளர் சுட்டுக் கொலை! விபரம் உள்ளே!

JUDE ANTHONYPILLAI PROFESSIONAL CORPORATION
JUDE ANTHONYPILLAI LL.B.
Barrister, Solicitor & Notary Public
Tel: 416.332.8547
Fax: 416.332.8379
Email: judelawoffice@rogers.com
Your questions answered! Your options explained!
2390 Eglinton Ave.East, Suite 250, Scarborough, ON. M1K 2P5

Nickes Fancy
நிகேஷ் பான்ஷி
Gents & Ladies Readymade Garments, Sarees, Salwar Kameez, Children Wears, Books & Gift Items
462 Jean Talon West, Montreal, QC. H31 1R3
514.495.3765, 514-270.81.81



THE COURIER SOURCE
International
- Worldwide Express
- Worldwide Economy
- Air Fright/ Sea Freight
- Export & Import
Local & Nationwide
- Overnight Services
- Same Day Services
- Direct Drive
905.761.7979
Torontoவிலிருந்து உலகின் எப்பாகத்திற்கும்.. இலங்கை, இந்தியாவிலிருந்து Torontoவிற்கும்.
8600 Keele St, Unit #10, Concord, ON, L4K 4H8
Sales@thecouriersource.com, www.thecouriersource.com



"Make Your Dream Home Come True"
Mississauga Branch
Monte Carlo Corporate Centre
7045 Edwards Boulevard, Suite 201
Mississauga, Ontario L5S 1X2
905-565-9200
Toronto Office
Morneau Sobeco Centre
895 Don Mills Rd., Ste. 202
Toronto, Ontario M3C 1W3
416-391-3232
Param Gnanaswaran
REAL ESTATE BROKER
Direct: 416 - 230 - 1107
RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE

Keeth Appliance & Heating,
Air conditioning Services
Central Air coditioning, furnace repair and installation,
Fridge/Washers/Dryers, Dishwashers/Stoves
Certified technicians! Reasonable rates! Reliable service!
Keeth Repair Technicican 647.768.4143

BALACHANDRAN MUTHAIAH
Professional Corporation
Balachandran Muthaiah LL.B.
Barrister, Solicitor & Notary Public
Real Estate Law, (Residential/Commercial), Business Law, Family Law, Immigration Law, Estates Law, Last Will, Affidavits, Probate, Translations, etc.
2401 Eglinton Ave. E. Suite 300, Toronto, ON M1K 2M5
Ph: 416.755.5544, Fax: 416.755.5594
e-mail: balalawoffice@gmail.com

# றொறோன்ரோவில் போராட்டம்




ஹார்ப்பர் அரசின் குடியுரிமைக் கொள்கைகள் இனவெறியைக் காட்டுகின்றன என அதற்கு எதிரான போராட்டம் ஒன்று றொறான்ரோவில் ஞாயிறு மாலை நடந்திருக்கின்றது. அங்கு பல கண்டன அட்டைகளை தாங்கியபடி பலர் முழக்கங்களை எழுப்பினார்கள்.

# மேயரின் குழுவுக்கு கொடுத்த முன்னுரிமை சரியா?



றொறோன்ரரோ மேயரின் கால் பந்தாட்டக் குழுப் பயிற்சியாளருக்கும் காலபந்தாட்ட நடுவர்களுக்கும் இடையே கடந்த வியாழனன்று நடந்த மோதலினால் Father Henry Carr Secondary பாடசாலைக்கு பொலிசார் வரவழைக்கப்பட்டனர்.

அங்கே வந்த பொலிசார் மேயரின் கால்பந்தாட்ட குழுவினரை அழைத்துச் செல்வதற்காக TTC யிடம் பேருந்துக்களைத் தரும்படி கேட்டிருக்கிறார்கள். சம்பவ இடத்துக்கு அருகில் சென்று கொண்டிருந்த 2 பேருந்துகளிலிருந்து பயணிகளை இறக்கி அவர்களைத் தவிக்கவிட்டு விட்டு அந்தப் பேருந்துக்களை உடனடியாக அங்கே அனுப்பியிருக்கிறது TTC.

நாங்கள் பேருந்துக் கேட்டோம் என்பதற்காக பயணிகளை நடுவழியில் இறக்கிவிடுவார்கள் என்று எமக்குத் தெரியாது", என்கிறது பொலிஸ்.

மேயர் ராப்ஃபோர்டும் தன் கைமூலம் பேருந்து அனுப்பும்படி கேட்டிருக்கிறார். ஆனால் அவர் பேருந்து வேண்டும் என்று அவசரப் படுத்தவில்லை எனச் செய்திகள் கூறுகின்றன

# மொன்றியலிலும் பூமி அதிர்ச்சி

செவ்வாய்க்கிழமை அதிகாலை 4:05 மணியளவில் 4.2 பரிமாணமுள்ள பூமி அதிர்ச்சி ஒன்று மொன்றியல் உட்பட கியூபெக்கின் பல பாகங்களை அதிர வைத்துள்ளது. இதனால் எந்த காயங்களோ சேதங்களோ பதியப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 200 சிறிய பூமிஅதிர்ச்சிகள் மொன்றியலுக்கும் ஒட்டாவுக்கும் இடையே நடப்பதும் குறிப்பிடத்தக்கது

## கனடாவில் புதிய $20

கனடாவின் புதிய $20 தாள் நவம்பர் மாதம் 7ம் திகதி புதன் கிழமை முதல் பணச்சுற்றோட்டத்தினுள் கலந்துள்ளது. நாட்டுக்காகத் தியாகம் செய்த கனடிய இராணுவ ஆண்களுக்கும் பெண்களுக்கும் காணிக்கையாக Remembrance Day ஐ ஒட்டி இது வெளியிடப்பட்டுள்ளது. இதன் பின்பக்கத்தில் Canadian National Vimy Memorial உள்ளது.

## Maltonஇல் ஒருவர் சுட்டுக் கொலை

மோல்ரனில் உள்ள வாகனம் நிறுத்தமிடம் ஒன்றில் வியாழன் இரவு பத்தரை மணி அளவில் முப்பத்திரண்டு வயதான அலெக்சாண்டர் தாம்சன் சுடப்பட்டிருக்கிறார். செய்தி கேட்ட பொலிசார் அவ்விடத்தை அடைந்த போது அவரின் இறந்த உடல் தான் கிடைத்திருக்கிறது. இது தொடர்பாக BNCH 717 என்ற இலக்கத்தைக் கொண்ட ஒரு நிசான் அல்டிமா காரை காவல் துறையினர் தேடி வருகிறார்கள்.

## கிறிஸ்டி பேக்கரி வரும் வருடம் மூடப்படுகிறது.


அறுபது வருடத்துக்கும் மேலான பழமை வாய்ந்த கிறிஸ்டி பேக்கரி வருகிற வருடம் மூடப்படுவதால் நூற்றுக் கணக்கான ஊழியர்கள் வேலையை இழக்கலாம்.

வசதிகள், பயன்பாட்டு அளவுக்கு குறைவான உற்பத்தி, மாறிவரும் சுற்றுப்புறம் இவையே நிறுவனத்தை மூட காரணமாகச் சொல்லப்பட்டாலும் பல அடுக்கு குடியிருப்புகள் அப்பகுதியில் வர இருப்பது தான் காரணம் என நம்பப்படுகின்றது.

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் வெடிகுண்டு அச்சம்!

Tsawwassen, B.C ல் கைவிடப்பட்ட நிலையில் இருந்த சந்தேகத்துக்குரிய பொதி ஒன்றை திங்கள் மாலை RCMP வெடிகுண்டு அகற்றல் குழு அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதால் அந்தப் பகுதியில் உள்ள பலர் வீட்டை விட்டு வெளியேற வேண்டி வந்தது.

# தாஜ்மகாலில் மயங்கிய கனடியப் பிரதமர்!



கனடியப் பிரதமர் ஹாப்பரும் குழுவினரும் இந்தியாவிற்கான 6 நாள் பயணம் ஒன்றில் இந்தியா வந்தனர். முதல்நாள் அவர்கள் தாஜ்மகாலை சென்று பார்த்தனர். தாஜ்மகாலை தமது 3வது மனைவி மும்தாஜ்மகாலின் நினைவாக சக்கரவர்த்தி ஷாஜகான் 1600களில் கட்டுவித்தான். ஹாப்பர் குழுவினருக்கு தாஜ்மகால் பிரத்தியேகமாகக் காட்டப்பட்டது. இதற்காக அங்கிருந்த சுற்றுப்பயணிகள் அவசரம்அவசரமாக வெளியேற்றப்பட்டார்கள். தாஜ்மகாலை சுற்றிப்பார்த்த பின்னர் ஹாப்பர் நிருபர்களிடம் கலந்துரையாடினார்.

தாஜ்மகாலின் அழகிற் தாம் சொக்கியதாகவும் அதை எல்லோரும் வந்து பார்க்கவேண்டும் என்று ஹாப்பர் அங்கு கூறினார். தாஜ்மகாலைப் போன்று ஒன்றைத் தனது மனைவி லோறினுக்குச் செய்வதற்குத் திட்டமிட்டிருக்கிறாரா என்று கேட்டபோது தனது மனைவியின் ஆசை மிகவும் அளவானது என்று ஹாப்பர் சிரித்துக்கொண்டு பதிலளித்தார். அப்போது பக்கத்திலிருந்த லோறின் தாம் சாகுமட்டும் அதற்காகக் காத்திருக்கத் தயாரில்லை என்று தனது பங்கிற்குக் கூறினார்.

1974இல் இந்தியா அணுகுண்டுப் பரிசோதனை செய்ததிலிருந்து கனடிய இந்திய உறவில் விரிசல் ஏற்பட்டது. கனடாவினாற் கட்டப்பட்ட அணுவுலையிலிருந்து எடுக்கப்பட்ட புளுட்டோனியத்தைப் பயன்படுத்தியே இந்தியா அணு குண்டுப் பரிசோதனை செய்ததாக கனடா குற்றஞ்சாட்டியது. இந்த விடயம் பற்றியும் கனடிய இந்திய உறவு குறித்தும் ஹாப்பர் இந்திய பயணத்தின்முன் பேட்டியொன்றில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். கனடிய இந்திய உறவு முக்கியத்துவம் பெறுவதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன. நாங்கள் 1970ஆம் ஆண்டுகளில் தற்போது இல்லை. அப்போதிருந்த சவால் நிறைந்த அவதானமான கனடிய இந்திய உறவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று ஹாப்பர் அப்பேட்டியில் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் நிச்சயமற்ற பொருளாதார நிலைமை நிலவுகின்ற இவ்வேளையில் வளர்ந்துவருகின்ற இந்தியாவுடன் வியாபார முதலீட்டு உறவுகளை விருத்திசெய்வது முக்கியமானது. அடுத்ததாக கனடாவில் இந்தியப் பூர்வீகம் கொண்ட ஒரு மில்லியன் மக்கள் வசிக்கிறார்கள். இந்தச் சமூக பண்பாட்டு தொடர்புகள் கனடிய வாழ்வின் முக்கிய உண்மையாகும். மூன்றாவதாக உலகப் பாதுகாப்பிற்கு இந்தியப் புவிசார் அரசியல் அம்சம் நீண்டகாலப்போக்கில் முக்கியமானது. மேற்படி கருத்துக்களை கூறிய ஹாப்பர் இந்தியா பல வழிகளில் கனடா மற்றும் மேற்குநாடுகளுடன் பொதுத்தன்மைகளைக் கொண்டுள்ளது என்றும் தெரிவித்தார். இந்தியா ஒரு கொமன்வெல்த் நாடு. அங்கு ஆங்கிலம் வியாபாரத்திற்கும் பொதுத்தொடர்பிற்கும் பாவிக்கப்படுகிறது. இந்தியா ஒரு ஜனநாயக நாடு. பன்முகத்தன்மை கொண்ட நாடு என்று இந்தியாவிற்கு ஹாப்பர் அப்பேட்டியில் புகழாரம் சூட்டினார்.

ஹாப்பரின் குழுவில் மூன்று இந்தியக்கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பிரதமர் ஹாப்பர் இந்தியாவிற்கு 2009இல் சென்றிருந்தார். பாதுகாப்புக்கருதி கனடாவிலிருந்து வரவழைக்கப்பட்ட இரண்டு கவச வாகனங்களை ஹாப்பர் பயன்படுத்திவருகிறார். கவச வாகனங்களை கனடாவிலிருந்து கொண்டுசென்றதற்கு என்டீபீ கட்சியும், லிபரல் கட்சியும் கண்டனம் தெரிவித்துள்ளன.

## ஐக்கிய இந்தியாவிற்கு கனடா ஆதரவு!

6நாள் இந்தியப் பயணம் மேற்கொண்டிருக்கும் கனடியப் பிரதமர் ஹாப்பர் இந்திய வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் பிரனீற் கவுரைச் சந்தித்தார். இந்திய அமைச்சர் கனடாவில் சீக்கிய தீவிரவாதிகள் மேற்கொள்ளும் இந்தியாவிற்கெதிரான பிரச்சாரம் பற்றிக் கவலை தெரிவித்தார். தான் பஞ்சாப்பைச் சேர்ந்தவரென்றும் இந்தியா பஞ்சாப் பிரதேசத்தில் சமாதானம் முன்னேற்றம் என்பவற்றை ஏற்படுத்தியுள்ளதாகவும் அதனைத் தொடர விரும்புவதாகவும் கவுர் கூறினார். கனடா ஐக்கிய இந்தியாவினை ஆதரிப்பதாகவும் கனடாவிலுள்ள பெரும்பாலான மக்கள் மாத்திரமின்றி இந்தியக் கனடிய சமூகத்திலுள்ள பெரும்பாலான மக்களும் இக்கருத்துடன் உடன்படுகின்றனர் என்று ஹாப்பர் பதிலளித்தார். இந்தியாவோ கனடாவோ எதிர்நோக்கும் ஆபத்து விடயங்களில் நாம் உங்களது அரசாங்கத்துடன் நெருக்கமாக வேலைசெய்கிறோம் என்றும் ஹாப்பர் தெரிவித்தார்.

சீக்கிய தீவிரவாதம் பற்றி செப்ரெம்பர் 2012இல் கனடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட் இந்தியா சென்றபோதும் இந்தியா கேள்வி எழுப்பியது. அப்போதைய இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்னா இப்பிரச்சினையை பெயட்டின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். கனடாவில் தீவிரவாதம் பற்றி எமது கவனத்திற்குக் கொண்டுவந்தவுடன் நாம் நடவடிக்கை எடுக்கிறோம். தீவிரவாதத்தை ஒழிப்பதில் இந்தியாவிற்கு ஒரு தீவிரமான கூட்டாளியாக கனடா இருக்கும். தீவிரவாதச் சவாலை எதிர்கொள்வதற்கு நாம் இன்னுஞ் செய்யவேண்டும். இந்த விடயத்தில் நாம் இந்தியா பக்கம் நிற்கிறோம். தீவிரவாதம் முழுக்கமுழுக்க ஏற்றுக்கொள்ளமுடியாதவிடயம். மேற்கண்ட கருத்துக்களை பெயட் அப்போது கிருஷ்னாவிடம் கூறினார்.

# ஒபாமாவுக்காக...தமிழர்கள்

சர்வதேசம் எங்களை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது என்று எங்களுடைய அரசியல்வல்லுநர்கள் அடிக்கடி சொல்வது போல, தமிழர்களும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். தேர்தலும் முடிந்து விட்டது. இனியென்ன? எங்கள் அரசியல் வல்லுனர்கள் "ஒபாமாவின் வெற்றி ஈழம் கிடைக்க வழி வகுக்குமா?" என்று லியோனி பாணியில் ஒரு பாட்டம் பட்டிமன்றமே நடத்தி விடுவார்கள். மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு, ஒரு புறத்தில், கப்பல் அனுப்பி தேசியத் தலைவரை மீட்காத துரோகத்திற்கு திட்டித் தீர்க்க ஒரு அணியும், மறுபுறத்தில் மகிந்தவைப் போர்க்குற்ற விசாரணையில் சிக்க வைத்து, இலங்கையில் ஈழத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கான "ஒபாமாவின் ஒப்பற்ற திட்டம்" பற்றி மறு அணியுமாக கொஞ்ச நாளைக்கு எங்கள் ஊடகங்கள் விளாசித் தள்ளும்.

எங்கள் இனத்தின் பெருமை அப்படி. ஒபாமாவுக்கான தமிழர்கள் என்று ஒரு லெட்டர்ஹெட் இணைய அமைப்பு கொஞ்ச நாளைக்கு முன்னால் ஊடகங்களில் உலா வந்தது. யார் எவர் இன்றி எவரும் எங்கள் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தலாம், நிகழ்ச்சி களை நிகழ்த்த விடாமல் நிறுத்தலாம் என்ற நிலை வந்தான பின்னால், சும்மாபோனவர்களுக்கெல்லாம் அமைப்புத் தொடங்குவதில் ஆச்சரியம் ஏது?

ஆனால், இந்தக் கூத்துக்களை எல்லாம் நம்பிவிசுவாசிக்கும் அளவில் இருக்கிறதே எங்கள் இனம் என்று நினைக்கும் போது கவலை கொள்ளாமல் இருக்க முடியுமா? முதல் தடவை ஒபாமா பதவிக்கு வந்தது தங்கள் புண்ணியத்தால் என்று இவர்கள் உரிமை கோராவிட்டாலும், தங்களுக்கு வெள்ளை மாளிகை வரைக்கும் தொடர்பு இருக்கிறது என்ற பிரமையை ஏற்படுத்த அவர்கள் தவறவில்லை. ஆனால் இன்று வரைக்கும் இந்த அமைப்பின் அமைப்பாளர்கள் யார் என்று தெரியாது. ஆனால் அறிக்கைகள் ஊடகங்களில் வெளிவந்த வண்ணமாய் இருந்தன. அவர்களின் கணிப்புப்படி 95 வீதமான தமிழர்கள் ஒபாமாவுக்கு வேறு வாக்கு அளித்து விட்டார்களாம். சுமார் 7000 பேர் வரையில் வேலை மினக்கெட்டு "வாக்களித்திருக்கிறார்கள்".

கனடியத் தேர்தல்களில் மட்டுமல்ல, அமெரிக்கத் தேர்தலிலும் தமிழர்கள் முடிவை நிர்ணயிக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டார்கள் என்று நாங்களே எங்களைக் குஷிப்படுத்திக் கொள்ள இதெல்லாம் உதவலாம். அதற்கப்பால் இவ்வாறான முயற்சிகள் எந்தப் பயனும் அளிக்கப் போவதில்லை.

எங்களுக்கான தீர்வுக்கு நாங்கள் எப்போதும் மற்றவர்களைப் பார்த்து கையேந்துவதும், எங்களுடைய தவறுகளுக்கு மற்றவர்களைக் குற்றம் சாட்டுவதுமாகத் தான் எங்கள் அரசியல் நடந்து வருகிறது. அந்தந்தக் காலங்களில் எங்களுக்குத் தேவை எதுவோ அதற்குத் தகுந்தது போலத் தான் எங்கள் "வெளிநாட்டுக் கொள்கை" இருந்து வந்திருக்கிறது. இதில் நண்பர்களைப் பகைக்கக் கூடாது, "பாலங்களை எரிக்கக்" கூடாது, எதிரியின் பலம் தெரியாமல் மோதக் கூடாது என்றெல்லாம் சாதாரண விசயங்கள் கூட எங்கள் வெளிநாட்டுக் கொள்கைகளில் இருக்கவில்லை. எங்களுடைய அன்றைய மனநிலைக்கு எது தோன்றுகிறதோ, அதுதான் வெளிநாட்டுக் கொள்கை. அதைக் கூட ஒருமித்த குரலில் நாங்கள் சொன்னதில்லை. விடுதலைப் புலிகளின் தளபதிகளாயிருந்தால் என்ன? அவர்களின் ஆசி பெற்ற ஊடகவியலாளர்களாக இருந்தால் என்ன? யாருக்கும் சவால் விடக் கூட தயக்கம் இருந்ததில்லை, அவற்றின் விளைவுகளைப் பற்றிய கவலை இல்லாமல். காரணம், தேசியத் தலைவரால் ஒருவரின் உதவியும் இன்றி ஈழத்தைப் பெற முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எங்களுக்கு இருந்தது.

அந்த நம்பிக்கையில் மண் விழுந்து, முள்ளி வாய்க்காலில் மண் கவ்விய பின்னால், குற்றவாளிக் கூண்டில் எங்களால் நிறுத்தப்பட்டு குற்றப்பத்திரிகை வாசிக்கப்படுவோர் பட்டியலில் அமெரிக்காவும் (ஒபாமா, ஹில்லறி உட்பட) உண்டு.

மறுபுறத்தில், இன்றைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களுக்கான தீர்வுக்காக, அமெரிக்காவையும் இந்தியாவையும் தான் நம்பியிருக்கிறது. அதிலும் இந்த இரண்டையும் காட்டி மகிந்தவை மசிய வைக்கலாம் என்ற பலத்த நம்பிக்கையுடன் இருக்கிறது. இதற்காக டில்லிக்கும் வாசிங்டனுக்கும் அடிக்கடி காவடி நடக்கிறது.

ஆக மொத்தத்தில் எப்படியாவது எங்கள் பிரச்சனையில் தலையிட்டு, தலைவர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து ஒபாமா தொடர்ந்து சென்று தமிழீழம் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு அடிமனதில் எங்கோ இருக்கிறது.

அதிலும் ஒபாமா திரும்பவும் வென்று விட்டார். கனவு மெய்ப்படும் என்ற நம்பிக்கை பலமாகியிருக்கும்.

இதெல்லாம் நாங்கள் நம்ப விரும்புகின்ற விடயங்கள். நினைக்கும் போதே இனிப்பாகத் தான் இருக்கும்.

இதில் பல்வேறு விடயங்களை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலாவது, நாங்கள் தனிமனிதர்களால் எங்கள் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்று நம்புகின்ற பழக்கத்தை விட வேண்டும். தேசியத் தலைவர் விடயத்திலும் நாங்கள் விட்ட தவறு இது தான். ஒபாமா விடயத்தில் நாங்கள் செய்யும் தவறும் இது தான். நாங்கள் சொல்லும் சர்வதேச சதி வலைப் பின்னலை உடைத்து ஈழத்தைப் பெற, பிரபாகரன் ஒன்றும் தமிழ்ச் சினிமாக் கதாநாயகன் இல்லை. இதைப் போல, மகிந்தவைப் பிடித்து சிறையில் அடைத்து, ஈழமக்களை சிறைமீட்க ஒபாமா ஒன்றும் உலகப் பொலிஸ்காரன் ஜேம்ஸ் பொண்டும் இல்லை.

ஒபாமா சமூக நோக்கமுள்ள மனிதராக இருக்கலாம். ஆனால் அவரை மீட்பராக நினைப்பது எங்கள் தவறு. உலகில் உள்ள எல்லாப் பிரச்சனைகளுக்கும் அவரால் தீர்வு காண முடியாது. "சர்வ வல்லமை பொருந்திய" அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தாலும், காங்கிரசும் பிரதிநிதிகள் சபையும் எதிர்க்கட்சியின் கையில் இருந்ததால், செல்வந்தர்களுக்கான வரி அதிகரிப்பு, மருத்துவத் திட்டம் போன்ற நல்ல திட்டங்களை அமெரிக்காவிலேயே அமுல்படுத்த முடியாமல் பழியைச் சுமக்க நேரிட்டது. இன்று காங்கிரஸ் காங்கிரசின் செனெட் சபை ஒபாமாவின் கட்சிக்காரர்களின் கையில் இருந்தாலும், நினைத்ததைச் சாதிக்க உதவும் "அதீதப் பெரும்பான்மை" எனப்படும் 67 அங்கத்தவர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இன்றும் இல்லை. காங்கிரசின் பிரதிநிதிகள் சபையும் அவர் கட்சியிடம் இல்லை. ஆக மொத்தத்தில் கடந்த ஒபாமா ஆட்சியில் நடந்த இழுபறி இம்முறையும் தொடரும்.

இப்படியாக தனிமனிதர்களிடம் தீர்வுகள் தேடித் தான் நாங்கள் முள்ளி வாய்க்காலில் முடிந்தோம்.

அடுத்து, புலிகளின் தலைமையைக் கப்பல் ஒன்றை அனுப்பி மீட்பதாகச் சொல்லிய பின்னர் அமெரிக்கா துரோகம் இழைத்து விட்டதாக இன்னமும் குற்றம் சாட்டும் அரசியல் நோக்கர்கள் இன்றும் உள்ளனர். அதற்கு இந்தியா விடுமா, அந்த உறுதிமொழி வெறும் சதியா, புலிகளைக் காப்பாற்றுவதற்கான அமெரிக்க நலன்களும் தேவையும் என்ன என்ற கதைகளை விடுவோம். புலிகளின் தலைமையை அழிக்க சதி செய்தது என்று ஆண்டாண்டு காலமாக குற்றம் சாட்டிய அமெரிக்கா காப்பாற்றுவதாக உறுதியளித்தவுடன் நம்புகிறோமே, இத்தனை உயிர்களைப் பலி கொடுத்த பின்னால், தங்கள் உயிர்களை மட்டும் காப்பாற்ற இவர்கள் எப்படி அமெரிக்க கப்பல்களில் தப்பியோட நினைத்தார்கள், மக்கள் எங்களை விட்டுப் போக விரும்பவில்லை என்றவர்கள் எப்படி மக்களை விட்டு தாங்கள் போக முயன்றார்கள் என்ற விடயங்களை நாங்கள் இன்றைக்கும் கருத்துக்கு எடுப்பதில்லை.

காரணம், உண்மைகளுக்கு முகம் கொடுப்பதை விட, அமெரிக்காவில் பழி போடுவது மிகவும் சுலபமானது.

ஆனானப்பட்ட அமெரிக்காவே சிரியப் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாமல் திணறுகிறது. ரஷ்யாவும் சீனாவும் ஈரானும் அமெரிக்க கனவுகளில் சிம்ம சொப்பனமாகவே இருக்கின்றன. இந்த நிலையில் எங்கள் பிரச்சனையை அமெரிக்கா உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது என்பது எங்களை நாங்கள் புல்லரிக்க வைக்க உதவும் ஒரு நினைப்பு மட்டுமே. இதில் ரஷ்யா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், ஈரான் என்று எல்லாமே சிங்கள அரசின் நண்பர்கள். எங்களுடைய ஒரே நண்பர் தற்போதைக்கு சீமான் மட்டும் தான். அதுவும் எத்தனை நாளைக்கோ, யாருக்குத் தெரியும்?

இதைவிட, அமெரிக்கா என்பது வெறும் ஒபாமா, றொம்னி என்ற தனி மனிதர்கள் அல்ல. அது உலகத்தை தனது கட்டுக்குள் வைத்திருக்க நினைக்கும் ஒரு இராட்சதன். அதற்கு மனித நீதியோ, சர்வதேச சட்டங்களோ ஒரு பொருட்டும் அல்ல. அதற்கு தெரிந்ததெல்லாம் தன்னுடைய நலன்களை எப்படிப் பாதுகாத்துப் பெருக்குவது என்பது தான்.

அங்கே ஆட்சியில் இருப்பவர்கள் மாறலாம். அமெரிக்க அரசின் இயல்பு மாறாது.

இதை உணர்ந்து கொள்ளாமல், துச்சாதனின் துகிலுரிதல் தாங்காமல் பார்த்தசாரதியை அழைத்த திரௌபதி போல, காப்பாற்று என்று நாங்களும் குரல் கொடுப்பதில் எந்த அர்த்தமும் இல்லை.

மற்றவர்கள் எங்களுக்கு விடுதலை வாங்கித் தருவார்கள் என்று நம்புவதை விடுத்து, எங்களுடைய தலைவிதியை நாங்களே நிர்ணயிக்க வேண்டும். அதற்கு நாங்கள் செய்ய வேண்டியது எவ்வளவோ உண்டு.

வெறுமனே வானத்தை நோக்கி மீட்பர்களுக்காக காத்திருக்காமல், தீர்வுகளை எங்களுக்குள்ளேயே தேடுவோம்.



ஏடு இட்டோர் இயல்


பூபாளம் வார இதழ்
Palm Springs Newspapers Ltd
நிறுவனத்தினரால்
ரொறன்ரோ, கனடாவில்
வெளியிடப்படுகிறது.



ஆசிரியர் குழு
சுல்பிபா
தவபாலன்
ரமேஷ்
தர்சன்

கனடியச்செய்திகள்-ஸ்ரீரஞ்சினி
உலகச் செய்திகள்-மகேஸ்
இந்தியச் செய்திகள்- முகுந்தன்
கலையுலகச் செய்திகள்-சுமதி
வாழ்வு,நலம்-சங்கமி
விளையாட்டு-பரதன்

இந்த இதழில் வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு. அவை பூபாளத்தின் கருத்தைப் பிரதிபலிப்பனவாய் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

ஆக்கங்களின் கருத்துச் சிதைவுறாமல், மாற்றங்களைச் செய்யும் உரிமை ஆசிரியர் குழுவுக்கு உண்டு.

வெளியாகும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு.

**Editorial Board**
Zulfika, Ramesh,
Dharsan, Thavabalan



Boobalam is published by
Palm Springs Newspapers Ltd.



1345, Morningside Ave #8,
Scarborough, On, M1B 2T3
Tel: 416 284 4004
e-mail: boobalam@ymail.com
Web:www.boobalam.com



Palm Springs Newspapers Ltd is a division of Palmgrove Media Group Inc.

# பாரிஸ் புலிகளின் பொறுப்பாளர் சுட்டுக் கொலை



பிரான்சில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் பரிதி, றீகன் என்ற பெயர்களால் அழைக்கப்படும் நடராசா மதீந்திரன் பரிஸில் வியாழன் இரவு சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். ஒருங்கிணப்புக் குழுவின் அலுவலகத்தில் இருந்து வெளியேறி வந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

புலிகளின் அழிவின் பின்னால், வெளிநாட்டில் வாழும் புலிகளின் பிரதிநிதிகளுக்கு இடையிலான மோதல்களின் எதிரொலியே இந்தக் கொலை என்று கருதப்பட்ட போதிலும், புலிகளுக்கு ஆதரவான ஊடகங்களில் தளபதி பரிதி வீரச்சாவு என்ற தலையங்கத்துடன், இலங்கைப் புலனாய்வுத் துறையே இந்தக் கொலைக்கு காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டது. பிரெஞ்சுப் பொலிசார் தங்கள் விசாரணைகளை தொடங்கும் முன்பாகவே, தமிழ் ஊடகங்கள் உடனடியாகவே புலனாய்வுத் துறையைக் குற்றம் சாட்டியுள்ள போதிலும், முன்னைய சம்பவங்கள் இது புலிகளின் உட்குழுச் சண்டையின் எதிரொலியே என்று காட்டி நிற்கின்றன. நோர்வேயை மையமாக வைத்து இயங்கும் நெடியவன் குழுவுக்கும் பிரான்சிலிருந்து இயங்கும் வினாயகம் குழுவிற்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் காரணமாக பல்வேறு பரஸ்பர தாக்குதல்கள் ஐரோப்பாவில் நடைபெற்றுக் கொண்டிருந்ததன் எதிரொலியாகவே நெடியவன் குழுவைச் சேர்ந்த பரிதியின் இந்தக் கொலையைக் கருத வேண்டியுள்ளது.

சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக பரிதியைக் குறி வைத்து பரிஸில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் ஆறுபேர் கொண்ட குழுவினால் இவர் தாக்கப்பட்டிருந்தார். வாளினால் அவரை வெட்டியதுடன் இரும்புக் கம்பிகளாலும் அவரைத் தாக்கியதுடன் அவருடன் வந்த மற்ற இரண்டு பேரையும் அந்தக் குழுவினர் தாக்கியிருந்தனர். தன்னைத் தாக்கியவர்களில் இரண்டு பேர் பரிஸில் இருந்த முன்னாள் புலி உறுப்பினர்கள் என்று இவர் அடையாளம் காட்டியும் இருந்தார்.

புலிகளின் பிரான்ஸ் பொறுப்பாளராக இருந்த இவரை பரிஸில் நடத்தப்பட்ட குற்றச் செயல்கள் காரணமாக பிரெஞ்சுப் பொலிசார் கைது செய்து சிறைத் தண்டனை வழங்கிய காரணத்தால் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இந்தியாவில் பயிற்சி பெற்ற இவர் 87ல் நடைபெற்ற வடமராட்சிச் சண்டையில் காயமடைந்தார். இந்தக் காயம் காரணமாக, இவர் நடப்பதில் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தார். பின்னர் இயக்கத்திலிருந்து வெளியேறி பிரான்ஸ் வந்த இவர், பின்னர் வன்னிக்கு சென்று புலிகளுடனான உறவைப் புதுப்பித்திருந்தார்.

கே.பியின் பதவி பறிக்கப்பட்டு காஸ்ட்ரோ வெளிநாட்டு அலுவல்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட போது, காஸ்ட்ரோவுடன் நெருக்கமான பரிதி பிரான்ஸில் புலிகளின் பொறுப்பாளராக இருந்தார். அதுவரை காலமும் ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் இயங்கி வந்த புலிகள் அமைப்பை, இவர் நேரடியாகவே எல்.டி.டி.ஈ பிரான்ஸ் என்ற பெயரில் இயக்கி வந்தார்.

அப்போது பலவந்தமாக தமிழ் மக்களை மிரட்டிப் பணம் சேர்ப்பதற்கு வன்முறைக் கும்பல்களை கூலிக்கு அமர்த்திய இவர் பணம் கொடுக்காதவர்கள் மீது வன்முறையும் பிரயோகித்து வந்திருக்கிறார். பணம் கொடுக்க மறுத்த தமிழர்களைப் பரிஸின் புறநகர்ப் பகுதியில் உள்ள பண்ணை வீடு ஒன்றுக்கு கடத்திச் சென்று மிரட்டியும் சித்திரவதையும் செய்து பணம் பறித்ததாகக் குற்றம் சாட்டிப்பிரெஞ்சுப் பொலிசார் இவரைக் கைது செய்திருந்தனர். தமிழ் மக்களை மிரட்டி ஐந்து மில்லியன் யூரோக்களை புலிகளுக்காக திரட்டினார் என்ற குற்றச்சாட்டில் இவருக்கு ஏழு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதில் சிறை வாசம் விதிக்கப்பட்ட நிலையில், மேன்முறையீடு செய்து வெளியே இருந்த காலத்திலேயே இவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

இந்த தாக்குதல் நடந்து சுமார் ஒரு வருடத்தின் பின்பு, தற்போது மாவீரர் தின ஏற்பாடுகள் நடைபெறும் நிலையில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். பிரபாகரன் இல்லாத நிலையில், இவரைத் தளபதி என்றும் இவரது மரணம் வீரச்சாவு என்றும் தமிழ் ஊடகங்கள் அறிவித்திருப்பது பலத்த கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

# மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா பரிந்துரைகளை ஏற்க இலங்கை அரசு மறுப்பு

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா சபையின் மனித உரிமைச் சபையில் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக நடைபெற்ற இடைக்கால மீளாய்வில் ஐ.நா முன் வைத்த பரிந்துரைகள் பலவற்றை ஏற்க இலங்கை அரசு மறுத்திருக்கிறது. இந்த மீளாய்வில் சுமார் நூறு நாடுகள் கலந்து கொண்டன. இந்த நாடுகள் 210 பரிந்துரைகளை முன்வைத்து இலங்கை அரசு அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியிருந்தன.

ஆயினும் அவற்றில் 100 பரிந்துரைகளை நிராகரித்த இலங்கை அர்சு 110 பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டது. காலக்கெடு விதிக்கப்பட்ட செயல்திட்டங்கள், சர்வதேச கண்காணிப்பு, என்பவற்றின் அடிப்படையிலான பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள இலங்கை அரசு மறுத்து விட்டது. இலங்கை அரசின் கண்காணிப்பில், காலக்கெடு விதிக்கப்படாத பரிந்துரைகளை மட்டுமே ஏற்றுக் கொண்டிருக்கிறது.


மீள் குடியேறியவர்களிடம் அவர்களின் நிலங்களை கையளிப்பது, இராணுவ நிலைகளைக் குறைப்பது, போராளிகளின் மறுவாழ்வு, வடக்கில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவது போன்ற பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டது.

மேற்குலக நாடுகள் முன் வைத்த பரிந்துரைகளில் பல ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சித்திரவதைகளைத் தடுப்பதற்கான ஐ.நா நடைமுறைகளை கைக் கொள்ள வேண்டும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும், மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கான சர்வதேச சட்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முக்கியமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள இலங்கை அரசு மறுத்து விட்டது. அத்துடன் மனித உரிமைகள் ஆணையத்தின் சுதந்திரமான செயற்பாட்டை உறுதி செய்வதற்கான சட்டத்தை கொண்டு வருதல், காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கான சுதந்திரக் கட்டமைப்பை உருவாக்குதல், கைது செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுதல், இணையத் தளங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற விதியை நீக்குதல் போன்ற வேண்டுகோள்களையும் அரசு நிராகரித்திருக்கிறது.

தாங்கள் தேவை என்று கருதுபவற்றையும், நிறைவேற்றக் கூடியவையையும் மட்டும் ஏற்றுக் கொண்டதாகவும், பல பரிந்துரைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அதனாலேயே பல கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் இலங்கை அரச சார்பு பிரதிநிதியான மகிந்த சமரசிங்க தெரிவித்திருக்கிறார். நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அதனாலேயே பல கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் இலங்கை அரச சார்பு பிரதிநிதியான மகிந்த சமரசிங்க தெரிவித்திருக்கிறார்.







BUY, SELL or LEASE

Dinesh Jeganathan
Sales Representative

cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# கனடாவிலும் குழந்தைகள் வறுமையில் வாடுகின்றனவா?

-காவலூர் பாலன்-

ஆம் என்று பதிலளிப்பதின் மூலம் கனேடியக் குழந்தைகளின் வறுமையைக் கனடிய மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார், உலகிலேயே மிகச் சிறந்த குழந்தைகளுக்கான ரொறன்ரோ வைத்தியசாலையின் (Toronto's Hospital for Sick Children ) அவசர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றும் டாக்டர் கெவின் சான் (Dr. Kevin Chan). அவரது சொந்த அவதானிப்பின்படி, கனடாவில் குழந்தைகள் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் குழந்தைகளில் சிலர், தங்கள் சொந்த வீட்டில் அமைதியாகத் தூங்குவதற்கோ அல்லது ஒரு நாளைக்கு மூன்று நேரமும் வயிறார உண்ணுவதற்கோ வழி இல்லாமல் வாடுகின்றனர்.

ஆனால் இந்த மிக முக்கியமான பிரச்சினை, அதாவது வறுமையில் வாடும் கனேடியக் குழந்தைகளின் பிரச்சினைக்கு, உரிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதில் டாக்டர் சான் மிகவும் உறுதியாக உள்ளார். இவ்வாறு பின் தங்கிய குழந்தைகளுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் ஆரம்ப வைத்திய சேவையை வழங்குவதற்கு வைத்தியசாலையில் அவர்களது பிரிவு இயன்றளவு முயற்சிக்கின்றது என அவர் கூறியுள்ளார்.

ரொறன்ரோ பிராந்திய கல்விச் சபையின் (Toronto District School Board) ஓர் ஆய்வின்படி, ரொறன்ரோவில் 15 வீதமான குழந்தைகளுக்கு ஆரம்ப வைத்திய சேவை கிடைப்பதில்லை. அதாவது அவர்களுக்கு ஒரு ஆரம்ப வைத்தியர் கிடையாது. மேலும் அந்த ஆய்வின்படி வறுமைப்பட்ட குடும்பங்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கோ அவர்களது குழந்தைகளுக்கோ நோயுற்ற வேளை யில் வைத்திய சேவையை நாட முடியாதுள்ளது. ஏனெனில் எமது வைத்திய சேவை வழமையாக காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை என்றே ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஏழை மக்கள் பகல் வேளைகளில் தமது தொழில்களுக்குச் சென்று விடுவதால், அவர்கள் வைத்திய சேவையைப் பெறுவது இயலாததாகப் போய்விடுகின்றது. அப்படியென்றால் இச் சிறுவர்கள் எங்கே செல்வது? நாளாந்த நடைமுறைச் சிகிச்சை நிலையங்களில் (Walk – in Clinics) இச் சிறுவர்களைப் பரிசோதிக்கக்கூடிய போதிய உபகரணங்கள் இருக்காது. எனவே எங்களது வைத்தியசாலையின் பிரத்தியேக சேவையை மனதில் கொண்டு உடனடியாக எங்களைத்தான் நாடுவார்கள். நான் மேற்படி வைத்தியசாலையில் சேவைக்குச் சேர்ந்த போது (2003 – 2004) வைத்தியசாலைக்கு வருகை தந்த குழந்தைகளின் எண்ணிக்கை, வருடத்திற்கு குறைந்த பட்சம் 45,000 ஆக இருந்தது. தற்பொழுது அது 63,000 ஆக, அதாவது 40 வீதத்தால் அதிகரித்துள்ளது என டாக்டர் சான் கூறுகின்றார்.

ஏன் இவ்வாறெல்லாம் நடைபெறுகின்றது? என ஆராயும் போது, (2011 ஜூலையில் மேற்கொண்ட சிறுவர்கள் இளைஞர்கள் மற்றும் தேசிய வீடமைப்பு ஆய்வின் - The National Housing Survey and Health on Children and Youth - படி) மிக ஆச்சரியப்படத்தக்க ஒரு முக்கியமான விடயம் தெளிவாகின்றது. அதாவது 52% குழந்தைகளுக்கு வீட்டு வசதி தேவைப்படுகின்றது. மேலும் அவர்கள து ஆய்வின்படி, இவர்களில் 17% குழந்தைகள் தனி ஒரு பெற்றோரின் (Single Parents) பிள்ளைகளாகவும், 39மூ அகதிகள் மற்றும் குடி வரவாளர்களின் பிள்ளைகளாகவும் உள்ளனர். மேலும் 14% குழந்தைகள் மிகப்பெரிய குடும்பங்களின் (6 அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் உள்ள) அங் கத்தவர்களாக உள்ளனர். ஒரு 4% வரையில், உடல் அல்லது மனநிலை பாதிக்கப்பட்ட குடும்பத்தின் அங்கத்தவர்களாக உள்ளனர் என்பதையும் நாம் இங்கு உற்று நோக்க வேண்டியுள்ளது. உண்மையில் இந்த ஆய்வு, குடும்பங்களின் மத்தியில் நிலவும் பாரிய வருமான இடைவெளியை அறியத் தருவதுடன், இவர்களில் அநேகமான குடும்பங்கள் ரொறன்ரோ நகரத்திற்கு வெளியே வறுமையான, இரண்டாந்தரக் குடியிருப்புகளில் வாழ்வதால், இவ்விடங்களில் போதிய மருத்துவ வசதிகளற்ற சூழ்நிலையிலேயே உழல்கிறார்கள். 2000 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி, 6,00,000 பேர், அதாவது ரொறன்ரோ பெரும்பாகச் சனத்தொகையில் பங்கினர் வறுமையில் தான் வாழ்கின்றார்கள்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயமென்னவெனில், அமெரிக்காவின் மிகப்பெரிய நகரமான நியூயோர்க்கில் வறுமையில் உழலும் மக்களைப் பற்றி அறிந்துள்ள நாம், எமது ரொறன்ரோவில் வறுமையில் வாழும் மழலைகளைப் பற்றி இன்னும் நாம் விழிப்படையவில்லை என்பதுதான். உண்மையில் இப்பொழுது ரொறன்ரோவில் அதிகரித்துள்ள குற்றச் செயல்களின் பின்னணிக்கு இதுவும் ஒரு முக்கிய காரணியாகும். உண்மையில் மனிதாபினான அடிப்படையில் ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பான இடம், போதுமான உணவு, உரிய கல்வி, போதிய சுகாதார வசதி என்பன அரசினால் வழங்கப்படல் வேண்டும். இவை ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளும் உரிமைகளுமாகும். ஆனால் வேறு நாடுகளில் உள்ள வறுமையில் வாடும் குழந்தைகளுக்கு இவைகளை வழங்குவதற்கு அக்கறை எடுக்கின்ற கனடியர்களான நாம், எமது ரொறன்ரோ நகர குழந்தைகளுக்கு இவை ஒழுங்காகக் கிடைக்கின்றனவா என்பதை அவதானிக்கத் தவறியுள்ளோம்.

டாக்டர் சான் மேலும் இவ்வாறு கூறுகிறார்: “குழந்தைகளுக்கு நாளாந்த தேவைகள் கிடைக்காது வறுமையில் வாடும் மிக வறிய நாடுகள் பலவற்றில் நான் முன்னர் பணி புரிந்துள்ளேன். ஆனால் இங்கே என் நாட்டில், எமது நோயுற்ற குழந்தைகள் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் சில குழந்தைகள், தினமும் மூன்று நேர உணவோ அல்லது அவர்கள் தூங்குவதற்குப் பாதுகாப்பான ஓர் இடமோ கிடைக்காமல் துயருறுவதைப் பார்க்கும் போது என்னால் தாங்க முடியவில்லை. உண்மையில் இது ஏன்? எவ்வாறு வந்தது? என்பவற்றை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.”
எங்களைப் பொறுத்தவரை, ரொறன்ரோவில் இந்த நிலை நீடிக்கப்படாமல் தடுக்க, குழந்தைகளின் உரிமைச் சாசனத்தின்படி உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்விடத்தில் உலகத்தில் இன்று குழந்தைகள் மத்தியில் நிலவுகின்ற வறுமையை உங்களுக்கு அறியத்தர வேண்டிய அவசரத் தேவை உள்ளது. இன்று உலகில் வாழும் சிறுவர்களில் அரைப் பங்கினர் வறுமையில் வாடுகின்றனர். மேலும் அவர்களில் 22,000 பேர் வறுமையின் கோரத் தாண்டவத்தில் தினமும் இறக்கின்றனர். இன்று சடுதியாக உயர்ந்துள்ள உணவுப் பொருட்களின் விலையுயர்வு அவர்களை மேலும் வாட்டுகின்றது.

இன்று நம்முன் உள்ள உடனடி வரலாற்றுக் கடமை, மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய லாயக்கற்ற, அழிந்து கொண்டிருக்கும் முதலாளித்துவ சமூக அமைப்பை மாற்றி, அந்த இடத்தில் மக்களுக்கு சமூக நீதியையும், சம சந்தர்ப்பங்களையும் வழங்கும் சமூக அமைப்பொன்றை நிலை நிறுத்துவதே. இதன் மூலமே வறுமையால் நாள்தோறும் இறக்கும் குழந்தைச் செல்வங்களைக் காப்பாற்ற முடியும். வறுமையும் யுத்தமும் இல்லாத வாழ்வே, எமது இன்றையத் தேவையாகும்.

குறிப்பு: மேலும் தேடல் உள்ளவர்களுக்கு
Child Poverty in Canada (Oxford 2010) by Dr.Patrizia AlbaneseLow income cut – offs –
http://www.statcon.gc.ca/pub/75f0002m/200g002/s2-enghtm

# அரசியலுக்கப்பால்...

நவம்பர் மாதத்தில் நடத்தலாமா, நடத்தக்கூடாதா என இருதலைக்கொள்ளி எறும்பு நிலையில் இளையராஜாவின் இன்னிசை நிகழ்ச்சி இறுதியில் குறித்த தினத்தில் இடம்பெறாமல் போய்விட்டது. நிலம் என்ற புயல் தான் காரணமாகக் கூறப்பட்டாலும் டொரோண்டோ வாழ் தமிழீழ உணர்வாளர்கள் எதிர்ப்பும் ஒரு காரணம் என்பதையும் மறுப்பதற்கில்லை.

தமிழீழத்துக்கு வெளியே வாழும் இலங்கை தமிழர்கள் மிக அதிகமாக வாழும் நாடு கனடா (குடியிருமை உட்பட சகல உரிமைகளும்), நகரம் டொரோண்டோ. எம்மவர் 1.6 மில்லின் டொலர்கள் செலவிட்டு ஏறத்தாழ 60,000 பார்வையாளரை எதிர்பார்த்து ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சி என்பது ஒரு பத்திரிகைச் செய்தி. நிகழ்ச்சிக்கு தமிழகத்தில் இருந்து வருவோர் 100 க்கும் அதிகம், நுழைவுக்கட்டணம் கூ50.00 முதல் 100.00 வரை. இத்தகவல்களை பார்க்கும்போது கனடாவில் பனிமழை மட்டுமல்ல பணமழையும் பொழிகிறதா என்ற எண்ணம் இலங்கைவாழ் தமிழ் மக்கள் மத்தியிலும் ஏனைய புலன்பெயர் வாழ் தமிழ் மக்கள் மத்தியிலும் எழக்கூடும்.

டொரோண்டோ மாநகரில் வாழும் ஈழத்தமிழரில் ஒரு சிறு தொகையினரே பணக்காரர்களாகவும், முதாளிகளாகவும், உயர் பதவிவகிப்பவர்களாகவும் உள்ளனர். பெரும்பாலானவர் இன்றும் உணவகங்களிலும், தொழிற் சாலைகளிலும் தொழிலாளர்களாகவே பணி புரிகின்றனர். ஒரு சிறு தொகையினர் வங்கிகள், காப்புறுதி நிறுவனம்கள், வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றில் பணிபுரிகின்றனர். மேலும் தற்போதைய பொருளாதார சுருக்கத்தில் ஏனைய கனேடியரைப்போல தமிழர்களும் வேலையற்றோர் பட்டியலில் தினமும் சேர்ந்து கொண்டிருக்கின்றனர். விலைவாசியும் ஊ.ே வுழறநச இக்கு மேலாக சென்றுகொண்டிருக்கிறது. வீட்டு அடமானம், சொத்துவரி, மின்சாரக்கட்டணம், தண்ணீர் கட்டணம் போன்றவற்றை செலுத்த சம்பள நாளையே எண்ணிக்கொண்டிருக்கிற குடும்பங்கள் பல. கனடா ஒரு சொர்க்கம் என்று கூறிய ஒரு காலம் இருந்தது. அன்றுபோல் இன்றில்லை. இத்தகைய சூழ்நிலையில் பிரமாண்டமான அத்தகைய ஓர் நிகழ்ச்சி அவசியம்தானா என ஒருபுறம் சிந்திக்க தோன்றுகிறது.

மறுபுறம் எம்மை நாம் ஏன் மறந்தோம்? கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஈழத்து கலைஞன் ஒருவன் அகதிநிலை கோரிக்கை மறுக்கப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.
அங்கு சென்ற சில மாதங்களில் காலனும் அக்கலைஞனை கவர்ந்து சென்றுவிட்டான். இதுபற்றி யாரும் பெரிதாக அக்கறை கொண்டிருந்ததாக தெரியவில்லை. அக்கலைஞனிடம் பயின்ற சில மாணவர்கள் மட்டும் சிறிதளவு பணம் சேர்த்து அக்கலைஞனின் குடும்பத்துக்கு அனுப்பியதாக ஒரு செய்தி. இது முடிந்த கதை.

இங்கு ஈழத்து கலைஞன் ஒருவர் ஓர் இசை இறுவட்டை தயாரித்து வெளியிடுவாரின், 5 டொலர் கொடுத்து வாங்கி கேட்க எம்மவர் அதிகளவில் முன்வருவதில்லை. திரைப்பட துறையை எடுத்துக்கொண்டால் தமிழகத்தில் இருந்து வெளிவரும் திரைப்படங்களில் கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு காட்சிகளை தவிர்த்த ஒரு திரைப்படத்தை தேடிப்பார்ப்பது மிக சவால் நிறைந்த செயலாகும். இங்கு ஈழத்து கலைஞனர் ஒருவர் கலை உணர்வோடும் இசைஞானத்தோடும் ஒரு திரைப்படத்தை தயாரித்து, வாருங்கள் வாருங்கள் என்று கூவிக்கூவி அழைத்தாலும் 10 டொலர் கொடுத்துப்பார்க்க எம்மவர் பலரும் முன்வருவதில்லை. ஏன் இந்த அவலம்? நாம் எமக்கென்றோர் திரைப்பட துறையை உருவாக்கினால் எமக்கு பெருமைதானே.

இசையரங்கேற்றம் நடன அரங்கேற்றம் என்றால் பாடகர்கள் பின்னணி வாத்திய இசை கலைஞர்கள் சிறப்பு விருந்தினர் என அனைவரும் தமிழகத்தில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறார்கள்; திறமை மிக்க பாடகர்களும் பின்னணி வாத்திய இசைக்கலைஞர்களும் இங்கிருக்க. இன்று ரொறொண்டோவில் தமிழகத்து கலைஞர்கள் கலந்துகொள்ளாத ஈழத்து தமிழர் கலைநிகழ்வு இல்லை என்றே கூறலாம். ஏன் இந்த நிலை?

பிரித்தானியர் காலத்தில் இருந்து வெள்ளையருக்கும் பின்னர் சிங்களவருக்கும் அடிமையாக வாழ்ந்த நாம் சுதந்திரமாக சிந்திக்கவும் செயல்படவும் வசதியான நாட்டில் வாழ்ந்துகொண்டு, எமக்கோர் சினிமா துறையையும், கலை இலக்கிய துறையையும் ஏன் எம்மால் உருவாக்க முடியாதுள்ளது? தமிழக கலைஞர்களுக்கு அள்ளி அள்ளி கொடுக்க முன்வரும் எம்மவரால் ஏன் ஈழத்து கலைஞரின் முயற்சிகளுக்கு கிள்ளிக்கூட கொடுக்க கூட முடிவதில்லை? சிந்திப்போமா?

-வே. விவேகானந்தன்-


SUPER SAVINGS
Throughout The Store
Memory Foam Mattress
UP TO 40% OFF
4 Pc Sofa Set W/Coffee Table
Bonded Leather
$899
$399
Memory Foam Mattress
From
$999
Lowest Price Guaranteed
Colour Choices Available
Bonded Leather
Sectional Sofa
$949
Bonded Leather
$999
Double Bed
From
$349
Bonded Leather
$1199
3 Pc Sofa Set W/5/Recliners
Top Grain 100% Genuine Italian
Leather Sectional Sofa W/ 4 RECLINERS
$2399
Complete Bedroom Set
$899
Bonded Leather
$999
3 Pc Sofa Set
Complete Bedroom Set
$1199
$299
$949
Complete Bedroom Set
$999
Italian Wardrobe
$599
7pc Dinette
$599
$139
Single
Folding Bed
$149
$499
Futon Bed
Bench
$299
$99
$109
$199
$299
Sunflowers
furniture
3024
KENNEDY RD.
416.609.8556

# WINNERS

## INSURANCE AND INVESTMENT SERVICES

**WE PROVIDE ALL TYPES OF LIFE INSURANCES, RETIREMENT PLANES & EDUCATION PLANS**

SINCE WE REPRESENTS VERITY OF INSURANCE & INVESTMENT COMPANIES, WE CAN PROVIDE YOU THE BEST PRODUCTS AT THE BEST RATES FOR YOUR NEEDS

SINCE WE ARE IN THE INSURANCE & INVESTMENT BUSINESS OVER 15 YEARS, WE CAN PROVIDE YOU THE BEST ADVISE TOO.

We have life insurance products for your protection, savings, for your retirement & for the family needs. You also can get all these in one policy.

Products offered

1) Term insurance, Universal life & traditional whole life insurance. Also NON MEDICAL Insurance up to age 85
2) Critical illness insurance, disability insurance, Long term care insurance
3) Medical Insurance, Travel & Supper Visa Insurance
4) Retirement products - Guaranteed monthly payments for life (Annuities & pension plans)
   RRSP'S - Monthly plans starting with $25/= ( can invest in guaranteed investment or mutual funds)
5) Registered Education Plans (RESP)- You can get FREE MONEY FROM GOVERNMENT FOR INVESTING IN RESP.
   (up to 40% of your investment as government grant + additional up to $2,000/= as Canada Learning Bond.)
6) Mortgage insurance - Protect your assets in the case of death, disability due to accident or sickness or due to critical illness.
   (Better than bank product - underwritten at the time of the issue, no post claim underwriting like banks)

**NO BODY CAN BEAT OUR RATES ON LIFE & MORTGAGE INSURANCE**
**COMPARE OUR RATES - ஒப்பிட்டுபாருங்கள் எமது கட்டணங்களை**

### Whole LIFE (பூரண காப்புறுதி)

INSURANCE RATES☑

| AGE | $100,000/= | | $250,000/= | | $500,000/= | |
|---|---|---|---|---|---|---|
| | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 20 | 31.45 | 26.03 | 60.56 | 47.74 | 111.63 | 85.98 |
| 25 | 35.72 | 30.50 | 70.54 | 57.95 | 131.58 | 106.40 |
| 30 | 43.74 | 36.99 | 91.68 | 77.90 | 173.85 | 146.30 |
| 35 | 53.55 | 44.71 | 122.55 | 103.96 | 235.60 | 190.05 |
| 40 | 68.85 | 55.35 | 158.89 | 125.35 | 304.87 | 239.94 |
| 45 | 92.61 | 76.32 | 212.58 | 171.13 | | |
| 50 | 114.75 | 98.01 | 257.71 | 224.06 | | |

WHOLE LIFE 20 YEARS PAY INSURANCE RATES☑

20 வருடங்களில் கட்டிமுடிந்தபின்பும் இருக்கும்

பூரண ஆயுள் காப்புறுதி

| $100,000/= | | $250,000/= | | $500,000/= | |
|---|---|---|---|---|---|
| MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 56.83 | 47.33 | 120.92 | 100.58 | 216.37 | 167.41 |
| 63.75 | 52.67 | 136.11 | 110.45 | 251.25 | 181.89 |
| 75.51 | 66.82 | 170.33 | 144.23 | 323.55 | 265.48 |
| 91.53 | 79.00 | 208.68 | 173.03 | 395.83 | 329.40 |
| 111.14 | 98.46 | 256.99 | 222.08 | 507.51 | 408.03 |
| 144.27 | 120.78 | 332.55 | 275.63 | | |
| 172.08 | 152.01 | 414.45 | 346.50 | | |

TERM (குறுகியகால காப்புறுதி) INSURANCE RATES ☑

| | $250,000/= | | | | $500,000/= | | | | $1,000,000/= | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| AGE | TERM 10 | | TERM 20 | | TERM 10 | | TERM 20 | | TERM 10 | | TERM 20 | |
| | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 25 | 12.37 | 9.68 | 17.10 | 13.06 | 18.00 | 12.83 | 28.98 | 19.48 | 28.35 | 17.10 | 46.80 | 30.40 |
| 30 | 12.37 | 10.35 | 17.55 | 13.06 | 18.45 | 14.25 | 29.25 | 21.38 | 29.25 | 19.95 | 50.40 | 35.15 |
| 35 | 12.15 | 10.13 | 18.00 | 14.18 | 18.54 | 14.99 | 27.18 | 21.60 | 30.15 | 24.66 | 50.22 | 37.89 |
| 40 | 15.75 | 13.05 | 24.08 | 18.23 | 23.85 | 18.95 | 39.51 | 27.45 | 40.68 | 28.71 | 69.84 | 50.40 |
| 45 | 22.73 | 16.15 | 35.55 | 27.00 | 32.27 | 21.38 | 60.53 | 46.40 | 57.60 | 37.35 | 116.64 | 85.95 |
| 50 | 32.18 | 23.40 | 58.95 | 42.30 | 51.30 | 35.37 | 104.76 | 73.17 | 96.39 | 66.60 | 205.20 | 141.57 |

**உங்கள் முதலீட்டு திட்டங்களுக்கும்** (RRSP. PENSION PLANS), **குழந்தைகளுக்கான முதலீட்டுதிட்டங்களுக்கும்** (RESP) **சகலவிதமான ஆயுள் காப்புறுதிகளையும் சிறந்த கட்டணத்தில் பெற்று கொள்ளவும், மேலும் உங்களது தற்போதைய காப்புறுதி,** PENSION PLAN **போன்றவை உங்களுக்கு போதுமானதா ! சிறந்ததா ! என்பன பற்றிய ஆலோசனைகளுக்கும்**

# அழையுங்கள்....

# RUBAN



**416 953 8036**

E:mail : **winnersinsurance@bell.net**

Web : **winnersinsurance.com**

**15 YEARS IN CANADIAN INSURANCE & INVESTMENT INDUSTRY**

☑ SOME CONDITIONS APPLY. ALL RATES ARE NON SMOKER RATES & SUBJECT TO CHANGE WITHOUT NOTICE. RATES ARE QUOTED AS OF 11th. October 2012.



# திரைப்பக்கம்

## ரஜனியை ஏன் பிரிந்தேன்? கமல் மனம் திறக்கின்றார்.

அபூர்வராகங்கள், மூன்று முடிச்சு, 16 வயதினிலே, இளமை ஊஞ்சலாடுகின்றது, அவர்கள், நினைத்தாலே இனிக்கும் உட்பட 15ற்கு மேற்பட்ட திரைப்படங்களில் ஒன்றாக இணைத்து நடித்த தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களான ரஜனியும், கமலும் திடீரென்று இணைந்து நடிப்பதை நிறுத்திக்கொண்டார்கள். அதற்காக காரணத்தை மனம் திறந்து அவர்கள் ஒருபோதும் கூறியதில்லை. பலவித மான காரணங்கள் அவ்வப்போது கிசுகிசுக்களாக வெளிவந்து, பின்னர் அடங்கியும் போனது.

தற்போது சூப்பர் ஸ்டார் என்ற நிரந்தரப் பெயரோடு ரஜனியும், உலகநாயகன் என்ற பெயரோடு கமலும் தமக்கான அசைக்க முடியாத இடத்தைத் தமிழ் சினி மாவில் தக் கவைத்துக்கொண்டிருக்கின்றார்கள் . அவர்களது வாரிசு களும் தற்போது தமிழ் சினிமாவில் பிரபல்யமாகி உள்ளார்கள்.

கமலை யும், ரஜனியையும் இணைந்து நடிக்க வைக்கவேண்டும் என்று பல வருடங்களாக முனைந்த தயாரிப்பாளர்களும்.

இயக்கு னர்களும் அவர்கள் ஆசை யைக் கைவிட்டும் விட்டார்கள். இந்த வேளையில் தாங்கள் ஏன் பிரிந்தார்கள் என்பதை மனம் திறந்து கூறியிருக்கின்றார் கமல்ஹாஸன். ரசிகர்கள் எதிர்பார்த்தது போல் போட்டி மனப்பான்மையோ, ஈகோவோ இல்லை இவர்களது பிரச்சனை. ஒரே படத்தில் இருவரும் இணைந்து நடிப்பதனால் அவர்கள் சம்பளம் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது.

தனித் தனியாக நடித்தால் இருவருக்கும் முழுமையான சம்பளம் கிடைக்கின்றது. அத்தோடு முழுமையான நாயகன் ாகவும் திகழ முடியும் என்று ஒரு மௌன ஒப்பந்தத்தை நாம் எடுத்துக்கொண்டோம் என்கின்றார் கமல். பணம் பத்தையும் செய்யும் என்பது இதைத் தானோ?

## மணிரத்தினத்தின் மட்டமான பேட்டி

"தமிழ் சினிமாவைக் காப்பாற்றும் நோக்கத்தோடுதான் சினிமாவிற்குள் நுழைந்தேன்" என்று அண்மையில் வெளியான "கான்வசேஷன் வித் மணிரத்னம்" எனும் புத்தகத்தில் வெளியான அவரது பேட்டியில் குறிப்பிட்டுச் சிக்கலுக்குள் மாட்டியிருக்கின்றார் இயக்குனர் மணிரத்னம்.

"70களில் வெளியான தமிழ் திரைப்படங்களுள், கே.பாலச்சந்தர், மகேந்திரன் போன்ற இயக்குனர்களின் திரைப்படங்களைத் தவிர்த்துப் பார்த்தால் வெளியான அனைத்து திரைப்படங்களுமே மிக மட்டமானவையே. இத்திரைப்படங்களைப் பார்த்த போது தமிழ் சினிமாவை நான் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் உருவானது, அதனால்தான் சினிமாவிற்குள் நுழைந்தேன்" என்று மிக மட்டமாகப் பேசியிருக்கின்றார் மணிரத்னம்.

மணிரத்னம் கூறிய இந்த எழுபதுகளில்தான் பாரதிராஜா அறிமுகமாகிப் பல தரமான திரைப்படங்களைத் தந்து கொடிகட்டிப் பறந்தார். தமிழ் சினிமாவின் மிகப்பெரிய ஆளுமை என்ற பெயரைக் கொண்ட பாலுமகேந்திராவும் எழுபதுகளில்தான் தமிழ் சினி மாவை வேறொரு தளத்திற்கு எடுத்துச் சென்றார். இயக்குனர் சிறீதரை நிச்சயமாக மணிரத்னம் மறந்திருக்க மாட்டார்.

தனது ஒரே திரைப்படமான "அவள் அப்படித்தான்" மூலம் இன்றும் தமிழ் சினிமாவில் தனக்கென்றொரு பெயரைத் தக்க வைத்துக்கொண்டிருக்கின்றார் இயக்குனர் ருத்ரைய்யா. இவர்களையெல்லாம் தாண்டி ஒரு திரைப்படத்தையேனும் தரமானதாகவோ, அல்லது தனது சொந்தத்திலோ மணிரத்னம் தந்திருக்கின்றாரா என்று அவரே அவரைக் கேட்டுப் பார்க்க வேண்டும்.

அதிகம் பேசமாட்டார் என்ற பெயரை எடுத்திருக்கும் இயக்குனர் மணிரத்னம் கொஞ்சம் ஓவராகத்தான் பேசிவிட்டார்.



## இன்னொரு பெண்ணின் கணவரை அபகரித்த சீதை.



சிறீராமராஜ்யம் எனும் திரைப்படத்தில் நயன்தாரா சீதை பாத்திரத்தில் நடிக்கத் தகுதி அற்றவர் என்று ஆந்திரத்திரைப்பட ரசிகர்களில் சிலர் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்கள்.

அதற்கு அவர்கள் கூறிய காரணம், நயன்தாரா இன்னொரு பெண்ணின் கணவரைத் திருமணம் செய்யப் போகின்றார், அப்படிப்பட்டவர் சீதையான நடிப்பது சீதையை அவர் அவமதிப்பாகும் என்பதாகும்.

சிறீராமராஜ்யம் படப்பிடிப்பு நடந்த வேளை நயன்தாரா, பிரபுதே வா காதல் உச்சத்தில் இருந்த காலம். இதுதான் தனது கடைசித் திரைப்படம், நடிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு முழுநேர மனைவியாக பிரபுதேவாவிற்கு உதவியான இருக்கப் போவதாக நயன்தாரா அப்போது அறிவித்திருந்தார்.

ஆனால் நடந்தது என்ன? பிரபுதேவா, நயன்தாரா கலியாணம் அல்ல, நயன்தாராவிற்கு சிறீராமராஜ்யம் திரைப்படத்தில் சீதைப் பாத்திரத்தில் நடித்ததற்கான ஆந்திர அரசின் உயர்ந்த நந்தி விருது கிடைத்ததே.

விருது கிடைத்ததை அறிந்ததும் நயன்தாராவின் ரசிகர்கள் சீதை உருவில் இருந்த நயன்தாராவின் போஸ்டரை ஊரெங்கும் பெரிதாக ஒட்டிக் கொண்டாடியிருக்கின்றார்கள்.

அப்போது நயன்தாரா சீதை யான நடிக்கக் கூடாது என்று எதிர்த்த திரைப்பட ரசிகர்களும் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் நயன்தாராதான் இன்னொரு பெண்ணின் கணவரை அபகரிப்பது தவறு என்றுணர்ந்து திருமணத்தை நிறுத்திவிட்டாரே என்பதுதான்.

விஷ்ணுவர்த்தன் இயக்கும் பெயரிடப்படாத புதுப்படம் ஒன்றில் அஜித்தும், ஆர்யாவும் இணைந்து நடிக்கின்றார்கள். நயன்தாராதான் இப்படத்தின் கதாநாயகி. இதற்கு என்ன சொல்லப்போகின்றார்கள் திரைப்பட ரசிகர்கள்.

## ரஜனி? ஓ மை காட்!

ஐஸ்வர்யாவின் இயக்கத்தில் "ஓ மை காட்" திரைபடத்தின் ரீமேக்கில் நடிக்கவிருக்கின்றார் ரஜனிக்காந்த். ஹிந்தியில் அஜெய்குமார் நடித்த பாத்திரமான கிரிஷ்ணன் வேடத்தில் தந்தையை நடிக்க வைக்கவுள்ளார் ஐஸ்வர்யா.

இத்திரைப்படம் மூடநம்பிக்கை களைக் கிண்டல் செய்தும், போலிச்சாமியார்களைத் தோலுத்தும் காட்டும் வசனங்களைக் கொண்டும் உருவாக்கப்பட்ட நகைச்சுவைத் திரைப்படம் ஏற்கெனவே வடக்கில் இத்திரைப்படம் வெளியான போது சமயநிறுவனங்கள் குழம்பிப்போனார்கள். தங்களுக்குக் கிடைத்துவரும் நிதி உதவி இதனால் ஆட்டங்கண்டுவிடுமோ என்ற குழப்பம் அவர்களுக்கு. அது சரி கமல் இப்படியொரு படத்தில் நடிக்கின்றார் என்றால் அதிசயிக்க முடியாது. ஆனால் ரஜனிக்காந்த் நடிக்கிறாரா? ஓ மை காட்!

அரசியல் சுவடுகளிலிருந்து...

# நம்பியாரிட்டை கவனமாக இரு!

எம் ஜி ஆர் ஆட்சிக்கு வந்தவுடன் அவரை வாழ்த்த வந்த மூதாட்டி ஒருவர் "மகராசன்! உந்த நம்பியாரட்டை மட்டும் கொஞ்சம் கவனமாக இரு!" என்று கூறினாராம்.

இன்னொரு சம்பவம் நடிகர் பாலாஜி வெளியூர் படப்பிடிக்குச் சென்றபோது நடந்தது. கஷ்டப்படுகின்ற ஒரு மூதாட்டிக்கு பாலாஜி 100ரூபா கொடுத்தார். கொடுத்துவிட்டு தான் யாரென்று தெரியுமா? என்று மூதாட்டியிடம் கேட்டார். "100ரூபா தாறதென்றால் நீங்கள் நிச்சயமாக எம் ஜி ஆர் தான் சாமி!" என்று அந்த மூதாட்டி அடித்துக் கூறினார்.

பிரச்சார ஊடகமாக சினிமாவின் முக்கியத்துவத்தை கழகக்காரர் சரியாகப் புரிந்து வைத்திருந்தனர். காங்கிரஸ்காரர் அதன் முக்கியத்துவத்தை விளங்கியிருக்க வில்லை அல்லது சினிமாவை அரசியலுக்குப் பாவிப்பது சரியா என்று தயங்கியிருக்கலாம்! ராஜாஜி "படம் எடுப்பதை நிறுத்துவது சினிமாக்காரர் சமூகத்திற்குச் செய்கின்ற பெரிய சேவை" என்று சொல்லுமளவிற்குச் சென்றார். நாங்களும் சினிமாவைப் பயன்படுத்தவேண்டும் என்று சிவாஜிகணேசன் கூறியதை காமராஜர் காதிலே போட்டுக்கொள்ளவேயில்லை.

திமுகவில் சினிமாக்காரரின் செல்வாக்கை எதிர்க்கப்போன சம்பத் வெற்றிபெறவில்லை. ராஜாஜியின் "திக்கற்ற பார்வதி" பின்னர் படமாக்கப்பட்டது. வைரத்தை வைரத்தால் வெட்டப் புறப்பட்டார் சிவாஜிகணேசன். சிவாஜிகணேசனுக்கு காமெராவுக்கு முன் நடிக்கத்தெரிந்தது. ஆனால் மக்களுக்கு முன்னால் நடிக்கத்தெரியவில்லை. அதனால் அரசியலில் அவர் எடுபடவில்லை. சிவாஜிக்குப் பின்னர் பல நடிகர் அரசியலுக்குவந்து இருந்தவிடம் தெரியாமற் போய்விட்டனர்.

அரசியலில் வெற்றி பெற சினிமாத் தொடர்பு மட்டும் போதாது. வெற்றி ஃபோர்மிலாவும் தெரிந்திருக்கவேண்டும்.

அந்தப் ஃபோர்மிலாதான் புரியாத புதிர்.

எழுத வாசிக்கத் தெரியாதோர் பெருமளவு இருந்தகாலத்தில் சினிமாவின் தாக்கத்தைப் புரிந்து கொள்ளலாம். இன்று வேறு எத்தனையோ ஊடகங்கள் வந்துவிட்டபோதிலும்கூட தமிழரால் சினிமாவின் ஆதிக்கத்திலிருந்து விடுபடமுடியவில்லை.

ரிவி சனல்கள் உட்பட ஏனைய ஊடகங்களே இன்று சினிமாமயமாகத்தான் இருக்கிறது. 1967 இலிருந்து சினிமாக்காரர்தான் தமிழ்நாட்டு முதலமைச்சராக வருகிறார்கள். அடுத்த சினிமாக்கார முதலமைச்சர் யார்? என்பதுதான் இன்றைய பலரது கேள்வி.

எவ்வாறாயினும் "ரஜனி அரசியலுக்கு வருவாரா?" என்று ஊடகங்கள் வதந்தி பரப்புவதும் "ஆண்டவன் சித்தம்" என்று ரஜனி சொல்வதும் கேட்டு அலுத்துப் போய்விட்டது.

"டூப்பு" நடிகன் பற்றி திண்டுக்கல் லியோனி சொல்லும் கதை மிகவும் சுவாரிசியமானது. கதாநாயகன் எலிவேற்றரில் ஏறுகிறான். 5வது மாடியில் தலையைக்காட்டுகிறான். இவை படமாக்கப்படுகின்றன. இப்போது "டூப்பு" நடிகன் 5வது மாடிக்கு போகிறான்: அங்கிருந்து ஒரே குதியாய் குதிக்கிறான். இதுவும் படமாக்கப்படுகின்றது. "டூப்பு" நடிகன் ஒரு இருநூறு ரூபாவை வாங்கிக்கொண்டு வீடு போகின்றான். இதிலை யார் டூப்பு நடிகன்?

சினிமாவிலை கதாநாயகனுக்காக பாட்டுப்பாடுவது யாரோ! சண்டைக்காட்சியில் நடிப்பது யாரோ! ஆககதாநாயகன்செய்யும்உருப்படியான காரியம் கதாநாயகியை கட்டிப்பிடித்து உருளுவதுதான். இதைச்செய்வதற்கு எத்தனையோ பணக்கார இளைஞர்கள் கோடிக்கணக்கான பணத்துடன் காத்திருக்கிறார்கள். இந்நிலையில் கதாநாயகர்களுக்கு ஏன் கோடிக்கணக்கான பணம் கொடுக்கவேண்டும்? கரும்பு தின்னக் கூலியா? என்று பலவருடங்களுக்கு முன்னர் எழுதினார் "அஞ்சாநெஞ்சன்" கைலைமன்னன். போதாக்குறைக்கு சினிமாக்காரருக்கு வாக்குவங்கி வேறு!

ஆக, தமிழ் சினிமாவில் போலிக்கும் அசலுக்கும் வித்தியாசம் பலபேருக்குத் தெரிவதில்லை. இதனாற்றான் "கெட்டவன் எல்லாம் நல்லவனாக நடிக்கிறான்: நல்லவன் எல்லாம் கெட்டவனாக நடிக்க வேண்டிக்கிடக்கிறது" என்று நடிகவேள் எம் ஆர் ராதா குமுறுவார். சினிமாவில் மட்டுமல்ல ஏனைய துறைகளில்கூட கெட்டவர்கள் எல்லாம் நல்லவர்களாக நடிக்கிறார்கள்.

குறிப்பாக அரசியலில் நாங்கள் நம்பியார்களிடம் மட்டும் கவனமாக இருக்கிறோம்!

ருத்ர தாண்டவன்

# இஞ்சியின் தொழில் ரகசியம்



நாம் உண்ணும் உணவு அடிக்கடி செரிமானம் ஆகாமல் போவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. மாமிசம், காலநிலை (குளிர் காலம்), முக்கியமாக இங்கு எண்ணெய் பாவிக்காமல் எந்த ஒரு உணவையும் சமைக்க மாட்டார்கள். கடைக்கு போய் சாப்பாடு வாங்கி வரும்போதும் கையோடு சமோசா, பாற்றி, வடை, ரோல்ஸ் என பல இணைப்புகளையும் வாங்கி வருவார்கள்

இது ஒரு நாள் மட்டும் நடப்பதல்ல. பல இடங்களில் அடிக்கடி நடப்பது. பிறகென்ன சாப்பிட்டால் சமிக்கவேண்டுமே, அதற்குத்தான் இருக்கவே இருக்கிறது "இஞ்சி கிழங்கு". இஞ்சியில் நிறைய மருத்துவ குணங்கள் இருக்கு. இஞ்சி எரிக்கும் குணம் உடையது, ஆகவே குளிர் காலத்திற்கு உகந்தது. முக்கியமாக பித்தத்தை போக்கும்.

உண்ட உணவு சமிக்கவிட்டால் ஒரு சிறு துண்டு இஞ்சியுடன் மூன்று மிளகு, உப்பு மூன்றையும் அரைத்து சிறு உருண்டைகளாக்கி வெந்நீருடன் விழுங்கினால் உடனயே சமிபாடாகும். இஞ்சி சாறுடன் தேன் கலந்து சூடாக்கி, காலையில் வெறும் வயிற்றில் ஒரு கரண்டி சாப்பிட்டு, கொஞ்சம் சுடு நீரும் குடித்து வந்தால் ஊளைச்சதை வைக்காது. பல நோய்களிற்கு மூல காரணமான மலச்சிக்கலுக்கு, இஞ்சியின் தோலை சுத்தமாக நீக்கிவிட்டு சிறு சிறு துண்டுகளாக வெட்டி நிறைய தண்ணீரில் கொதிக்கவிட்டு, பின் இளம் சூட்டில் காலையில் ஒவ்வொரு நாளும் குடித்து வந்தால் மலச்சிக்கலும், வாய்வு தொல்லைகளும் நீங்கி வயிற்றிலும் எந்தவித பிரச்சினைகளும் வாராது.

சளி, இருமல் பிரச்சினை உள்ளவர்கள் இஞ்சியின் தோலை நீக்கி சுத்தப்படுத்தி நசுக்கி பாலில் இட்டு, அதனுடன் கற்கண்டு, கொஞ்சம் மிளகு சேர்த்து காய்ச்சி குடிக்கலாம். ஒருநாளைக்கு ஐந்து கிராம் இஞ்சி பாவிக்கலாம், இஞ்சியில் கல்சியம், இரும்பு சத்து, மக்னீஷியம், சோடியம், பொட்டாசியம், வைட்டமின் எ, பி, சி, போன்ற சத்துக்கள் உள்ளன.

இது ஒரு சர்வயோக நிவாரணி. அதிலும் நாற்பது வயதுக்குமேல் இஞ்சியை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் நீங்களும் என்றுமே இஞ்சி இடும்பனாகவும், இடுப்பழகியாகவும் காலம் பூராகவும் ஆரோக்கியமாக வாழலாம்.

சங்கமி





Photocopies From 4 cents

Palm Print 1345 Morningside Ave#8

யாருக்கு சொல்லியழ? 8

# மூளைச் சுத்திகரிப்பும் இனச் சுத்திகரிப்பும்



இளவழகன்

அண்மையில் அவுஸ்திரேலியா தனது குடிவரவு திட்டங்கள் பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அவர்களின் திட்டம் இதுதான்: வெளிநாட்டு அதி உயர் அறிவாளர்களை, குறிப்பாக ஆசிய அறிவாளர்களை குடிவரவு கொள்கைகளின் மூலம் கவர்ந்திழுப்பது. அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் "we need migrants who bring their specialist skills to Australia" என்று கூறியுள்ளார். அவுஸ்திரேலியா குறிவைக்கும் நாடுகளின் பட்டியலில்முன்னணியில் இருப்பது இந்தியா, சீனா, பிலிப்பின்ஸ், இலங்கை, மலேசியா, தென் கொரிய, வியட்னாம். இந்த திட்டத்தில் சுமார் 23 வீத "மூளைகளை" அவுஸ்திரேலியா இந்திய உபகண்டத்தில் இருந்தே பெறுகிறது.

அவுஸ்திரேலியா மட்டுமல்ல, அமெரிக்காவும் இவ்வகை கொள்கைகளையே கொண்டுள்ளது. அமெரிக்காவின் குடிவரவு கொள்கையின் நோக்கமும் "to attracting and retaining highly-skilled immigrants" என்கின்றது. சமீபகாலங்களில் அமெரிக்காவின் 25 வீத தொழில்நுட்ப நிறுவனங்கள் குடிவரவாளர்களாலேயே ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா.

பிரித்தானியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. பிரித்தானிய பிரதமரின் கூற்றுப்படி அவர்களின் நோக்கம்: "attracting more of the brightest and best". இவர்களும் தமது குடிவரவு கொள்கைகளை அதற்கு ஏற்ப அமைத்து தூதுவர் நிலையங்களையும் தயார்படுத்தியுள்ளனர்.

கனேடிய குடிவரவு திட்டங்களும் இவ்வகையே. ஏறக்குறைய எல்லா "மேற்கு" நாடுகளும் இவ்வகை கொள்கைகளையே கொண்டுள்ளன. அத்துடன் அக்கொள்கைகளை மேலும் வலுப்படுத்துகின்றன . அதுசரி இதிலென்ன நட்டம்?

இந்த "மேற்கு" அரசியல் உலகின் பார்வையில், அதிஉயர் ஈனச்செயல்களில் ஒன்று 'ethnic cleansing'. இந்த 'ethnic cleansing' கின் விளைவு ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தின் சொத்துக்கள், உடைமைகள் எல்லாவற்றையும் பறித்தெடுப்பது. மொத்தத்தில் ஒரு சமூகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார நலன்களுக்காக இன்னொரு சமூகத்தை அழிப்பது. இதை அவர்கள் வன்முறை மூலம் செய்வர்.

ஆனால் 'luring' மூலம் நடைமுறைப்படுத்தப்படும் மேல்கூறப்பட்ட 'brain cleansing' ஆனது வன்முறைகள் எதுவும் இன்றி நடைமுறைப்படுத்தப்பட்டாலும் 'brain cleansing' இனதும் 'ethnic cleansing' இனதும் விளைவுகள் ஏறக்குறைய ஒன்றே. இருவகை cleansing களும் பொருளாதாரத்தையே முதன்மை காரணியாக கொண்டுள்ளன. இவற்றின் விளைவு ஒரு சமூகத்தின் அழிவில் இன்னொரு சமூகம் மேலோங்கி வளர்வது.

இலங்கை போன்ற தன்காலில் நிற்கவே முடியாமல் தள்ளாடும் வறிய மூன்றாம் உலக நாடுகள் அளவற்ற குழந்தைகளை பெற்று, மலசலம் கழுவி, ஏழை கைகளால் அமுதூட்டி, அவற்றில் சிறந்ததுக்கு இலவச கல்வியால் அறிவூட்டி அறிவாளிகளை உருவாக்க, எங்கிருந்தோ வந்த இன்னொரு சமுதாயம் நோயற்ற, குறைவற்ற, அறிவானவற்றை மட்டும் எடுத்துச்சென்றால் கழிக்கப்பட்டவற்றை மட்டும் வைத்து அந்த சமுதாயம் என்ன செய்யும்? அறிவாளி அல்லாதவர்களையும் நோய்வாய்ப்பட்டவர்களையும் கழித்துவிட்டு சுகதேக அறிவாளிகளை எடுத்து செல்வதை நினைக்கும் போது Food Inc. என்ற விவரண படத்தில் "நல்ல" கோழி குஞ்சுகளை தெரிந்தெடுத்து பின் கழிக்கப்பட்ட குஞ்சுகளை அரைக்க எடுத்து செல்வதல்லவா நினைவுக்கு வருகிறது.

அதையும் விட சோகம் என்னவென்றால் எப்போதும் ethnic cleansing கண்டு குழறியழும் ஐ.நா. சபை கூட brain cleansing இன் பாதிப்பு பற்றி எதுவும் கூறுவில்லை. இந்த ஐ.நா.சபையானது உண்மையில் பாரபட்சம் எதுவும் இன்றி உலகின் எல்லா நாடுகளின் நலனுக்காகவே உருவாக்கப்பட்டது என்றால், brain cleansing மூலமான பாதிப்புகள் பற்றியும் அது கற்றறிந்து கருத்தை தெரிவிக்க வேண்டுமல்லவா? அவ்வாறு செய்வது அதன் தலையாய கடைமையல்லவா? அத்துடன் அதை தடுக்க நடவடிக்கைகளும் எடுக்க வேண்டுமல்லவா?





# மாய உலகத்து மந்திரக்கோல்!

## திரைக்கதை நுட்பங்கள் - தொடர்-1

சனத்திரள் நிறைந்த ஒரு தியட்டர்.

குடும்பம், நண்பர்கள், சகிதம் பரபரப்பாய் உள்ளே நுளைந்து, ஒரு வரிசைக் கதிகைளை ஆக்கிரமித்துக்கொண்டு, கொட்டமடித்தபடி கொக்கோ கோலாவை கைபிடித் துளைக்குள் சொருகி, சோளனை கொரித்துக்கொண்டு கால் நீட்ட வழம் பார்த்து, முன் இருக்கைத் தலைகள் திரையை மறைக்காதபடி அரக்கி இருந்து ரெடியாக விளக்குகள் படிப்படியாய் அணைந்து இருள்மயமாகி, வண்ண ஒளிக்கீற்றுகள் திரையைத் தீண்டி உருவங்கள் தோன்றி, ஒன்றன்பின் ஒன்றான விளம்பரங்கள் ஓடிமறைந்து, இனிவரும் சில திரைப்பட ரெயிலர்கள் வந்து முழங்கித் திகில்காட்டி ஓய நடிகர்கள், ஒப்பனையாளர்கள், இசையமைப்பாளர், புரடியூசர், டைரக்டர் என்ற சம்பிராயபூர்வ எழுத்தோட்டம் முடிந்தோ முடியமலோ தோன்றியது திரைப்படம்! தோன்றியதுதான் தோன்றிற்று, அது தோன்றிய கணம்தொட்டு அடுத்து ஒரு இரண்டு மணி நேரத்திற்கு என்னை ஒரு மந்திரக் கயிறால் கட்டிப்போட்டு வைத்திருக்கும் விந்தைதான் என்ன? ஒரு ஐநூறு அறுநூறுபேர் சுற்றிவர வீற்றிருந்தும், கூடவே வந்த குடும்பம் நண்பர்கள் உள்ளிட்ட கூட்டம் குடியிருந்தும், அனைவரிலிருந்தும் விலகி நான் மட்டும் எப்படித் தனிமையாய் போய்விடுகிறேன்? இரண்டு நிமிடம் ஓர் இருள் அறையுள் இருக்கப்பிடிக்காத நான் இரண்டு மணத்தியாலம் இவ் ஓவென்ற கும்மிருட்டில் குந்தியிருந்து ஒரேயொரு திரையைமட்டும் எப்படிக் கொட்டப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்? அந்த இரண்டு மணத்தியாலத்திலும், என் வயது அதுவல்ல, என் உருவம் அதுவல்ல, என் பருவம் அதுவல்ல, என் மனைவி, பிள்ளைகள், அப்பா அம்மா, எவரோடும் எனக்குத் தொடர்பில்லை. என் படிப்பு என் அறிவு, என் நம்பிக்கைகள், எல்லாமே இப்போது வேறு. நான் இயல்பில் ஒரு கோழையாயிருக்கக்கூடும் ஆனால் இங்கு நான் ஒரு வீரன், நான் என் மகளின் காதலுக்குத் தாம் தூமென்று குதித்து, அவசர அவசரமாய் "மாப்பிள்ளை பிடித்து, கிட கழுதையேயென்று கட்டிவைத்தவனாயிருக்கட்டும்" ஆனால் இங்கோ இக் காதல் கைகூடுமா என்று துடிப்பவன். நானே லஞ்சம் வாங்குபவனாய், ஊழல் பேர்வழியாய், ஏன் வில்லன் செய்யும் அதே தில்லுமுல்லுகள் அனைத்தையும் செய்தவனாயிருந்தாலும்கூட இங்கு நான் வில்லனின் பக்கமல்ல மாறாக, அநீதிகளை எதிர்க்கும் ஒரு நியாயவாதி.

எப்படி இப்படி மாறினேன்? மொத்தத்தில் நான் இங்கு நானேயல்ல. எனக்குள் இருக்கும் இன்னொரு நான் இப்போது நானாகி, என் பௌ தீக, லௌகீய இருப்புக்களையும் மானசீக வார்ப்புக்களையும் அடியொற்ற மாற்றி, திரைப்படத்தின் கதையோடும் பாத்திரங்களோடும், உணர்வோடும் உணர்ச்சிகளோடும் என்னை உறவாடி உலவிவர விட்டிருக்கிறது. இந்தப் புதிய நானைப் பெற்றெடுத்தது வேறுயாருமல்ல முன்னால் ஓடும் திரைப்படமேதான்! என்னுள் ஓடும் ரத்தமும் என் குணங்குறிகளை நிர்ணயித்திருக்கும் ஜீன்ஸூம் இவ் இரண்டுமணிநேரப் பெற்றாரின் அம்சங்கள்தான்.

இப்படித் தன்னந்தனியாக வந்து எனக்குள் புகுந்து உலுப்பித் தள்ளி, ஆடவைத்துப் பாடவைத்து, ஆத்திரப்படவைத்து அழவைத்து ஒரு இரண்டு மணத்தியாலமாய் தனியுலகில் சஞ்சாரம் செய்ய வைத்துத் திருப்பி அனுப்பும் இத் திரைப்படம், இன்னொருபுறமாக, தியட்டருள் இருக்கும் எம் அனைவரையும் ஒன்று கட்டி ஒரே ஆளாக மாற்றி, ஒரே கண்ணைத் தந்து ஒரேவிதப் பிரதிபலிப்புக்களுடன் கிறங்கிப்போய் இருக்க வைப்பது இன்னொரு விந்தை! ஒரே ஆளாய் மாற்றியதென்றேன். இப்போதய 3டீ படங்களில் அது இன்னும் துலாம்பரம். ஒரு கிரகம்

வெடித்துச் சிதறும். சின்னத் துகள் ஒன்று நேரே எம் கண்ணுக்கு வரும். நாம் அத்தனைபேரும் ஒரே நேரத்தில் கண் மூடித் தலையை விலத்துவோம். ஒரே கண் என்றேனே, அந்தக் கண்ணிலும் இன்னொரு விந்தை! அது புறக்கண்ணும் மனக்கண்ணும் கலந்த புதுவிதக் கண். காட்சி ஒன்றிருக்கும் அதைக் காணும் விதம் வேறாயிருக்கும்.

காட்சியை மட்டுமன்றி காணாதவற்றையும் காணும் கண். ஒரு விமானம் இறங்கும் "வாசலில் கார் வந்து நிற்கும்" வேற என்ன காட்சி தேவை யாரோ வெளிநாட்டிலிருந்து வந்திருப்பதைப் புரிந்துகொள்ள? படத்தில் நாம் பார்க்கும் காட்சிகளை விட பார்க்காமல் பார்க்கும் காட்சிகளே அதிகம். அவற்றையெல்லாம் எம் கண் இட்டு நிரப்பிக்கொள்ளும். ஒரு விளக்கு அணைந்தால் ஆள் முடிஞ்சுது என்பதைப் புரிந்துகொள்ளும். ஒரு பாதம் மட்டும் எப்படி நடக்கிறது என்று குழம்புவதில்லை, அதற்குரிந்தான உருவம் திரைக்கு அப்பால் உள்ளதை அறியும் திறன் படம் பார்த்திருக்கும் குழந்தையின் கண்ணுக்கும் உண்டு.

அதுமட்டுமல்ல இது மனனை தயும் படிக்கும் மந்திரக் கண். "வாங்க," என்று சிரித்துக்கொண்டே வரவேற்கும் வில்லன் உண்மையில் "உன்னை யார் வரச்சொன்னது" என்று மனதி னுள் கறுவுகிறான் என்பதை அது கண்டுகொள்ளும். படிப்பே கண்ணாயிருக்கும் அப்பாவிக் கதாநாய கனின் செயற்பாடுகளுக்கு நேரெதிராக, அநியாயங்களை ஒழித்துக்கட்டும் ஒரு இலட்சிய வேட்கை அவனுள் ஓடிக்கொண்டிருப்பதை அது கண்டுகொள்ளும். பாத்திரங்களின் புற வடிவத்தைக் கடந்து அவர்களுள் இருக்கும் உண்மையான பாத்திரத்தை அதை பார்க்கும். இக் கண்ணுக்கு காலத்தை கடந்து நோக்கும் திறனும் உண்டு. கையில் கட்டியிருக்கும் கடிகாரத்தின் காலம் இங்கில்லை. படத்தில், வில்லன் இருபத்திநான்கு மணத்தியாலக் காலக்கெடு கொடுத்தால், இரண்டு மணத்தியாலத்தில் படம் முடிந்துவிடுமே என்று யாருமே குழம்புவதில்லை.

இப்படித் தனியாகவும் கூட்டாகவும் எம்மை ஆட்டிப் படைக்கும் இத் திரைப்படம் என்னும் பிரமாண்டமான கலைப்படைப்பு எப்படிப் படைக்கப் படுகிறது என்பதை அறிய ஆர்வப்படாதவர்கள் இருவர் ஒருவர் இறந்தவர் மற்றவர் இன்னும் பிறக்காதவர்! இவ் விருவரைத் தவிர்த்து மீதியுள்ளவர்கள் வேறுயாருமல்ல, நீங்களேதான்! எனவேதான், நானும் சில பல வருடங்களாக, இது பற்றிய ஆர்வக் கோளாறில் தேடித் தெரிந்துகொண்ட அறிந்துகொண்ட புரிந்துகொண்டவற்றைப் பகிந்து கொள்ள நினைந்தேன்.



மொத்தத்தில் நான் இங்கு நானேயல்ல. எனக்குள் இருக்கும் இன்னொரு நான் இப்போது நானாகி, என் பௌதீக, லௌகீய இருப்புக்களையும் மானசீக வார்ப்புக்களையும் அடியொற்ற மாற்றி, திரைப்படத்தின் கதையோடும் பாத்திரங்களோடும், உணர்வோடும் உணர்ச்சிகளோடும் என்னை உறவாடி உலவிவர விட்டிருக்கிறது.
திரைக்கதையை அலசத் தெரிந்துகொண்டால் நாம் எவ்வளவோ உயர்ந்த ரசனைத் தரத்தை எட்டிக்கொள்வோம். அப்போ என்னாகும்? எம் திரைப்படங்களும் எம் ரசனையைத் திருப்திசெய்யும் தரத்துக்கு உயரவேண்டிய கட்டாயம் உருவாகும்.
திரைப்படத்தை நிர்ணயிக்கும் தவிர்க்கமுடியாத மூன்று முக்கிய காரணிகளில் முதலாவது திரைக்கதை! இரண்டாவது என்ன தெரியுமா? அதுவும் திரைக்கதை மூன்றாவதும் திரைக்கதைதான்.

**எழுதுவது பாஸ்கி ரி. ராஜ்**

திரைப்படம் ஒரு கூட்டுக் கலை. பல கலைகளையும் உள்வாங்கிய ஒரு பிரமாண்டக்கலை. கதை, திரைக்கதை, நடிப்பு, பேச்சு, கவிதை, பாடல், இசை, நடனம், சண்டை,.. என்பன ஒருபுறமும், ஓவியம், ஒப்பனை, அலங்காரம், சிற்பம், வடிவமைப்பு, ஆட் டைரக்ஷன், போன்றவை ஒருபுறமும், டைரக்ஷன், கமெரா, லைட்டிங், அனிமேஷன், கொம்யூட்டர் டிசைனிங், கலர் டோனிங், ஒலிப்பதிவு, ஸ்பெஷல் எஃபக்ட்ஸ், எடிட்டிங் போன்ற தொழில்நுட்பக் கலைகள் மறுபுறமாக அனைத்துவிதக் கலைகளுடனும் உருவாகி, விளம்பரக் கலைமீது தவழ்ந்து திரையரங்கு வந்து சேர்கிறது சினிமா. இவை அனைத்தையும் பற்றி எழுத நானொன்றும் சினிமாக் கடவுளுமல்ல நானெழுதி, என் பிள்ளை எழுத, அதுவரை வயதாகாது படித்திருக்க நீங்கள் சினிமாப் பாத்திரமுமல்ல.

ஆக, நான் எழுதப்போவது திரைக்கதை பற்றி. (அங்காங்கே கறிவேப்பிலையாக மற்றவற்றைத் தூவிக்கொண்டு...) இதைத் தெரிந்தெடுத்ததன் காரணத்தைச் சொல்லிவிடுகிறேன். எம்மில் பலருக்கு புத்தகக் கதைக்கும் திரைக்கதைக்கும் வேறுபாடு தெரியாது. புத்தகக் கதையை இன்னொரு வகையாகப் பிசைந்து பிழிந்தால் திரைக்கதையாய் வடியும் என்ற நினைப்பு. ஆனால் திரைக்கதை என்பது வேறுபட்ட ஒரு கதைவடிவம். புத்தகக் கதை "நாடகம்" திரைக்கதை என்பன மூன்றும் வேறு வேறு கதை வடிவங்கள். அவைபற்றி அடுத்த தடவை பேசுவம்.

அடுத்து, திரைக்கதை என்பது திரைப்பட மாணவர்களுடன் மட்டும் முடங்கிவிட்ட ஒரு படிப்பாகிக் கிடக்கிறது. இதனால், எமது திரை ரசனையும் மழுங்கிக் கிடக்கிறது. திரைக் கதையை அலசத் தெரிந்து கொண்டால் நாம் எவ்வளவோ உயர்ந்த ரசனைத் தரத்தை எட்டிக்கொள்வோம். அப்போ என்னாகும்? எம் திரைப் படங்களும் எம் ரசனையைத் திருப்திசெய்யும் தரத்துக்கு உயரவேண்டிய கட்டாயம் உருவாகும். தண்ணீர் மட்டம் உயரும்போது தாமரைத் தண்டு வளர்ந்தே ஆகவேண்டும் குளத்தளவே ஆகும் ஆம்பல் என்று ஔவை சொன்னதுபோல (அக் கவிதையின் மறு அடியில் எனக்கு உடன்பாடில்லை) இதன் விளைவாக நாம் நல்ல படைப்புகளைப் பெறுவம்.

திரைப்படத்தை நிர்ணயிக்கும் தவிர்க்கமுடியாத மூன்று முக்கிய காரணிகளில் முதலாவது திரைக்கதை! இரண்டாவது என்ன தெரியுமா? அதுவும் திரைக்கதை மூன்றாவதும் திரைக்கதைதான், என்பர் திரைக்கதையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக.

ஏனெனில், திரைப்படம் உருவமென்றால் அதன் எலும்புக் கூடாக அமைவது திரைக்கதைதான். எலும்புக்கூட்டை அகற்றிவிட்டால் திரைப்படம் ஒரு சதைப் பிண்டமாக சொதக்கெனக் கீழே விழும். திரைக்கதையின் முக்கியத்துவம் அத்தகையது. அத்தகைய திரைக்கதைக்குள் புக முன்னர் நாம் புரிந்துகொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன.
முதலாவதாக, திரைக்கதை விதிகளால் நெறிப்படுத்தப்படுகிறது, சட்டங்களாலல்ல, என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். "நீ இப்படிச்

12 ம் பக்கம் பார்க்க

# இணையத்து இணைப்பைப் பலப்படுத்துவோம்

ஜோர்ஜ்



இணையத்தை வீடுகளுடன் இணைக்கும் தொலைத்தொடர்பு நிறுவனங்களின் மோடெம் எனப்படும் கருவியிலிருந்து, வீட்டில் உள்ள பல்வேறு கணனிகளுக்கு இணைப்புச் செல்கிறது. இந்த இணைப்பு முன்பு வயர்கள் எனப்படும் இழைகள் ஊடாகச் சென்றாலும், வயர்களை வீடு முழுவதும் இணைக்க வேண்டிய அசௌகரியங்கள் காரணமாய் இழையில்லா வயர்லெஸ் இணையத் தொடர்பு பரவலாகப் பாவனைக்கு வந்து விட்டது. இழையில்லா இணையத் தொடர்பு மடிக் கணனிகளையும் கணிபலகைகளையும் வீட்டில் மட்டுமன்றி, வீட்டுக்கு வெளியே கொல்லைப்புறமாயும் பயன்படுத்த வழி செய்து விட்டது.

ஆனால், பிரச்சனை என்னவெனில், அந்த இழையில்லா இணைப்பின் வீச்சு எல்லைக்குள் இருக்கும் எவரும் அதில் நுழைய முயற்சிக்கலாம். வீச்சுக்குள் பக்கத்து வீட்டுக்காரர்கள் இருந்தால் அவர்கள் திருட்டுத் தனமாக உள்ளே நுழைய முயற்சிக்கலாம். தெருவில் செல்பவர்கள் காரை நிறுத்தி, காருக்குள்ளே இருந்து கூட நுழைய முயற்சிக்கலாம்.

அவ்வாறு நுழைபவர்கள் உங்களுக்குத் தெரியாமலேயே படங்களைத் தரவிறக்கம் செய்தால், தொலைத்தொடர்பு நிறுவனம் உங்களுக்கு ஒதுக்கிய மாதாந்த தரவு அளவின் எல்லை மீறி நீங்கள் அதிகளவு பணம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகக் கூடும்.

அதைவிட, சட்டவிரோதமான நடவடிக்கைகளை, குழந்தைகளின் தகாத படங்கள் உட்பட்ட, உங்கள் இணைப்பின் மூலமாக யாராவது மேற்கொண்டால் நீங்கள் அதற்காகக் குற்றம் சாட்டப்படும் அபாயமும் உண்டு.

இந்த தொல்லைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள, இந்த இழையில்லா இணைப்புகளுக்கு உள் நுழைவதற்கு தடையை ஏற்படுத்தி, அனுமதிக்கப்பட்டோர் மட்டுமே உள்ளே நுழைய ஒரு சங்கேத கடவுச் சொல் ஒன்றை உருவாக்கினால், அனுமதியில்லாதோர் நுழைய முடியாது.

பெருங்குடியிருப்புத் தொகுதிகளில் இன்றும் பலர் இவ்வாறான தடைகள் எதுவும் இன்றி தங்கள் இணைப்புகளை யாரும் பயன்படுத்தக் கூடியதாக திறந்து விட்டுள்ளனர். இதனால் அயலவர்கள் பலர் எந்தச் செலவும் இன்றி இணைய இணைப்பைத் திருட்டுத்தனமாக பெறக் கூடியதாக உள்ளது. தீய நோக்கங் கொண்டோர் இந்த இலவச இணைப்புகளைப் பயன்படுத்தி பல்வேறு மோசடிகளைச் செய்து வருகின்றன.

இதற்கு முக்கியமாக வழமையாக மற்றவர்கள் கண்டுபிடிக்கக் கூடிய சொற்களைப் பயன்படுத்தக் கூடாது. பலரும் சோம்பேறித்தனம் காரணமாக *123456*, asdfg போன்ற இலகுவான கடவுச்சொற்களைப் பயன்படுத்துவர். இவை பலரும் இலகுவாக ஊகித்து விடக் கூடிய சொற்கள். எனவே கடினமான கடவுச் சொற்களைப் பயன்படுத்த வேண்டியது அவசியம்.

இருந்தாலும், கணனிப் பிரகிருதிகள் இதையும் மீறி உங்கள் வீட்டு வலைப்பின்னலுக்குள் நுழைய வழிவகைகளைக் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். இதற்காக பல்வேறு பாதுகாப்புப் பொறிமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. WEP (Wired Equivalent Privacy), WPA (Wi-fi Protected Access), WPA2 (Wi-fi Protected Access, version 2) எனப்படும் மென்பொருள் பொறிமுறைகள் இழையில்லா இணைப்பை பாதுகாக்கப் பயன்படுகின்றன.

இதில் WEP எனப்படுவது முதலில் அறிமுகமானது. இதில் உள்ள தொழில்நுட்பக் குறைபாடுகளால், இந்த தடையை சிறுமுயற்சியுடன் உடைக்க முடியும். இதனால் அடுத்த WPA அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவும் கணனிப் பிரகிருதிகளால் தகர்க்கப்பட, அதை விட பாதுகாப்பான WPA 2 முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தொழில் நுட்பங்களுடன் சரியான கடவுச் சொல்லையும் பயன்படுத்துவதன் மூலம் மாற்றார் நம் இணையக் கோட்டைக்குள் நுழைவதைத் தடுக்க முடியும்.

# மொன்றியல் கொலை, தற்கொலைச் சம்பவம்

சென்ற வாரம் மொன்றியலில் நடைபெற்ற கொலை, தற்கொலை பற்றி வெளிவந்த செய்தி ஜேர்னல் டு மொன்றியல் என்ற பிரெஞ்சுப் பத்திரிகையிலும் மற்றும் கனடிய ஊடகங்களிலும் இருந்த வந்த செய்திகளுடன் வேறு பல தொடர்புகள் மூலமாகவும் பெறப்பட்டது. அதில் வந்த ஒரு வார்த்தைப் பிரயோகம் கொல்லப்பட்டவர் குறித்து தவறான அபிப்பிராயம் ஒன்றை ஏற்படுத்தும் என நலன் விரும்பிகள், ஊர்ச் சங்கத்தினர் தெரிவித்தனர். அந்தச் செய்திக் குறிப்பு பலரின் மனதைப் புண்படுத்தியமைக்கு வருந்துகிறோம்.

இது குறித்து மேலும் சரியான தகவல்களைப் பெறுவதற்காக மொன்றியல் புலன் விசாரணைப் பிரிவினருடனும் தொடர்பு கொண்டுள்ளோம். அவர்கள் 33வது பொலிஸ் பிரிவினர் எங்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களைத் தருவதாக உறுதியளித்துள்ளனர். அந்த விபரங்கள் பெறப்பட்டதும் முழுமையான தகவல்களை வெளியிடுவோம்.


## உங்கள் நினைவுகளை நிரந்தரமாக்க...

கொடாக் நிறுவனத்தின் நவீன புகைப்பட அச்சு இயந்திரங்களில் உங்கள் புகைப்படப் பிரதிகளை அச்சிட்டுக் கொள்ளுங்கள்.




நூறு வருடங்களுக்கு மேல் பாதுகாக்கப்படக் கூடிய பிரதிகள்!
8 x 10 அளவிலான பிரதிகளை நீங்களே அச்சிட்டுக் கொள்ளலாம்.

உங்கள் படங்களுடன் கூடிய கலண்டர்கள், வாழ்த்துக்கள், அழைப்பிதழ்கள்
உங்கள் கமெராக்களில் உள்ள மெமரி கார்ட்களிலிருந்தும், உங்கள் செல்லிடப் பேசியிலிருந்து Bluetooth மூலமாகவும் படங்களை அச்சிடலாம்.

உங்கள் படங்களிலிருந்தும் நேரடியாக பிரதிகளைப் பெறலாம்.

**Palm Print Inc.**
**1345 Morningside Ave #8 Tel:416 284 9545**



## மிக முக்கியமானதும் முன்னுரிமையானதும் உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பே...

Individual Life Insurance, Mortgage Insurance,
Disability Insurance, Critical Insurance,
Non-Medical Insurance, Travel Insurance

Registered Education Saving Plan (RESP)
Registered Saving Plan (RRSP)

**Call**
**Ravi Ponnudurai**
**(Insurance Advisor)**
**Direct: 647-868-6475**

*Even During Tough Times,*
*Life Insurance Offers Peace of Mind*



Get the right
Super Visa Insurance
best suited for your needs!

Super VISA

MEGA Financial Group
"Foundation of your financial freedom"
PH28 - 4168 Finch Aveune. E.
Scarborough, ON
M1S 5H6
Bus: 416-293 5559
Fax: 416-293 9409
www.megafinancial.ca

# நிலைத்த வடு நீங்க வழியேற்படுமா? ஆறாத வடுவை ஏற்படுத்திய அந்த நாட்கள் வரலாற்றில் பதியப்படுமா?


*சென்ற வாரத் தொடர்ச்சி....*

முஸ்லீம் மக்களும் போரிளிகளின் பாதுகாப்பிற்காக தமது படுக்கையறையைக் கூட ஒழிவிடமாக பாவித்து போராளிகளை மறைத்து காத்த மாண்புகளை எங்கள் முஸ்லீம் சகோதரிகள், தாய்மார்கள் செய்த வரலாறுகளைக் கொண்டதே ஈழவிடுதலை வரலாறு. இவ் அனுபவங்கள் எங்கள் பலருக்கும் உண்டு.

குறிப்பாக கிழக்கு மாகாணம் எங்கும் இலங்கை அரச படைகள், தனி நாட்டிற்காக போராட்டப் புறப்பட்டவர்களினால் மாற்று இயக்கங்கள் துப்பாக்கி முனையில் நசுக்க முற்பட்ட போது எல்லாம் நாம் பாதுகாப்பு தேடிய போது எங்களைப் பாதுகாத்த வரலாறு இந்த சகோதரிகளை நிறையவே சாரும். யாரோ சிலர் “ஜிகாத்” என்று பறப்பட்டு தவறான ஆயுத செயற்பாட்டை காரணம் காட்டி முழு முஸ்லீம் சமூகத்தையும் இல்லாமல் ஒழிக்க எடுத்த செயற்பாடு கிழக்கில் மக்களின் இணைந்த செயற்பாட்டின் மூலம் செயற்படுத்த முடியாமல் போனதே எம் மக்களின் வீர வரலாறு. முரண்பாடுகளை வளர்க்க ஊர்க்காவல் படையென ஆயுதங்களை சிறுபான்மை முஸ்லீம் மக்களுக்கு மட்டும் அல்ல பெரும்பான்மை அப்பாவிச் சிங்கள மக்களுக்கும் வழங்கி குண்டுகளைப் பரிமாற்றிக் கொலையைக் கண்டு எக்காளம் இட்டதே ஐதே கட்சியின் வரலாறு. இதற்கான ஆலோசனையை முஸ்லீம் மக்களின் எதிரி இஸ்ரேலிடம் இருந்து அறக்கமதி செய்த ஏகாதிபத்திய சார்பு வலாற்றை ஜே.ஆர் காலத்தில் ஆரம்பித்து பிரேமதாஸ வரைக்கும் தொடர்ந்த வரலாற்றை கொண்டதே இலங்கையில் 30 வருடகால யுத்த சாட்சியங்கள்.

இலங்கை பேரினவாத அரசின் இச் செயற்பாட்டடை பாராளுமன்ற நாற்காலியில் கண் வைத்துள்ள மிதவாத முஸ்லீம் பாராளுமன்ற தலைமைகளும் தமக்கு சாதகமாக பாவித்துக் கொண்டனர். இவர்கள் யாருக்கும் பொதுமக்கள் மீத எந்த அக்கறையும் இருக்கவில்லை. கிடைத்த பதவிகள் மூலம் கொழும்பில் தெகிவளையில் சொத்துக்களை வாங்கிக் குவித்த தடயங்களை நாம் அறிந்து கொள்ள முடியும். சாதாரண சாமான்ய மக்களிடையே சகோதரத்துவத்தை வலுவாக்கி வளர்க்க இடைவெளிகள் இல்லாமல் செயற்படுவதில் இவர்கள் தற்காலிக வெற்றிகளை கண்டனர் என்பது சோகமான நிகழ்வுகளே. இதனாலேயே இன்று வரை துடைக்கப்பட முடியாத வரலாற்றை இது எழுதி நிற்கின்றது. யாழ் மாநகர சபையில் ஒரு முஸ்லீம் முதல்வரை அமரவைத்து சகோதரத்துவத்தை வளர்த்த மக்கள் தலைவர் கார்த்திகேசன்கள் இன்று எங்கள் மத்தியில் இல்லை. இருந்திரந்தால் இன்றும் யாழ் மாநகர சபையில் பதில் முதல்வராக ஒரு முஸ்லீம் சமூகத்தை சேர்ந்தவரை அமர்த்தி சகோதரத்துவத்தை நிறுவ முற்பட்டு யாரோ இட்ட வடுக்களுக்கு ஒத்தமாவது கொடுத்திருக்கலாம் முடியவில்யே என்ற ஆதங்கம் எங்கள் பலருக்கும் இன்றும் உண்டு.

இச் சந்தர்பத்திற்கு முன்பும் ஈழ விடுதலைப் போராட்டத்திற்காக போராடிய விடுதலை அமைப்புகள் பலவும் முஸ்லீம் மக்கள் மீதான தாக்குதல்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச் சாட்டுக்கள் உள்ளன. இதில் உண்மைகள் இல்லாமல் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்த்து ஏனைய ஆயுதம் எந்திய விடுதலை அமைபுக்குகள் கொள்கை ரீதியாக முஸ்லீம் மக்களை வடக்கு கிழக்கில் இருந்து இன சுத்திகரிப்பு செய்வது என்பதைக் கொணடிருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரமே வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லீம் மக்கள் அங்கிருந்து முற்று முழுதாக இன சுத்திகரிப்பு செய்தல் என்ற செயற்பாட்டை தமது இயக்கத்தின் கொள்கையாக கொண்டிருந்தவர்கள். வடக்கு கிழக்கு தமிழர்களின் (மட்டும்) பாரம்பரிய பிரதேசம். இங்கு வேற்று இனங்களுக்கு இடம் இல்லை என்ற கொள்கையின் அடிப்படையில் தலைவரால் வழி நடத்தபட்டவர்கள். இதற்கான நியாயங்களையும் அவ்வப் போது முன்வைத்து வைந்தவர்கள்.



முள்ளிவாய்கால் இறுதி யுத்தத்தின் போது வவுனியா முகாங்களுக்கு கொண்டு வரப்பட்ட தமிழ் மக்கள் கிட்டத்தட்ட மூன்று வருடங்ககளில் பல்வேறு விமர்சனங்கள் குறை நிறைகளுக்கு மத்தியிலும் தமது பாரம்பரிய வாழ்நிலங்களில் ஓரளவுக்கேனும் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்களுக்காக புலம் பெயர் தேசத்தின் தமிழ் தேசிய உணர்வாளர்களும், ஐநா மனித உரிமை அமைப்புக்களும், சனல் 4 போன்ற ஊடகங்களும், தமிழ் நாட்டுச் சீமான்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கொடுத்த உரக்கக் குரலில், ஒரு கீச்சுக் குரலாவது 22 வருடங்களாக தமது பாரம்பரிய பிரதேசங்களில் இருந்து எம்மவர்களாலேயே விரட்டப்பட்ட இன்னும் ஒரு சிறுபான்மை இனக் குழுமத்தை மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்று கோர முடிவில்லை என்றால் நாம் எல்லோரும் எங்கே நிற்கின்றோம் என்ற சிந்தித்த பார்க்க குற்றவாளிக் கூண்டிலேயே நிற்கின்றோம்.

கீச்சுக் குரலிலாவது அன்றே இம்மக்களின் அவலங்களுக்கு குரல் கொடுத்திருந்தால், செயற்பட்டிருந்தால் தொடரும் 22 வருட கால அவலம் இந்த உள் நாட்டில் அகதிகளாக்கப்பட்ட மக்களின் அவலம் தீரந்தீரக்கும். இம் மக்கள் மனதில் யாரோ இட்ட வடுகள் இன்று மெது மெதுவாக கரைந்து காணாமல் போய்யிருக்கும். இதனை குறிப்பாக தமிழ் சமூகம் செய்ய வேண்டும். இடப் பெயரந்த அகதிகள் விடயத்தில் இரு சமூகமும் இணைந்த போராடும் பொறி முறைகள் ஏற்படுதப்பட வேண்டும். முடிந்தளவில் இணைந்த இயந்து போராட வேண்டும். சகோதரத்துவத்தை வளர்த்துக் கொள் வேண்டும். தமக்கிடையே மீண்டும் சுவை யான பிட்டுக் குழல் பாரம்பரியத்தை ஏற்படுத் வேண்டும். முணன்றால் ஏதும் முடியாது என்பது இல்லை வரலாறு.

ஒடுகப்படும் சமூகக் குழுக்கள் தனித்த நின்று போராடாமல் இணைந்து நின்ற போராடினால் வெற்றி மக்களுக்கு நிச்சயம். போராட்டத்தில் பகைவர்களை குறைத்து நண்பர்கள் இணைத்தால் வெற்றி நிச்சயம். நாம் போரை விரும்பும் நோயாளிகள் அல்ல சமாதானத்தை விரும்பும் மனிதர் கூட்டம் என்பது சர்வதேச மனித குலத்திற்கு உறுதிபடுத்தப்பட வேண்டும். நாம் வாழ்வதற்காகவே போராடுகின்றோம் மாறாக சாவதற்காவோ அல்ல. ஆனால் இந்த போராட்ட வாழ்வில் நாம் சில வேளைகளில் மரணிக்கலாம் இது தியாகம் என்பதைவிட இது வரலாற்றுக் கடமை என்பதே சரியானதாகும். இதனை உணரந்து போராட வெளிகிடுவதே சாலச்சிறந்தது. ஒடுக்கப்படும் எந்த உயிரினமும் தான் உயிர் வாழ்வதற்காக போராடிக்கொண்டே இருக்கும். நான்கு கால்களையும் இழந்து சுடுமணலில் தப்புவதற்கு வாய்புகள் குறைந்த நிலையிலும் எறும்பு கூட இறுதிவரை தான் வாழ்வதற்காக போரர்டும் போது ஆறு அறிவு மிக்க மனிதர்கள் எம்மாத்திரம். இவற்றை பகுத்தாய்வு செய்து போராடப் புறப்பட்டிருக்க வேண்டும் தலைமையை வழங்க முற்பட வேண்டும். இவ் விடையத்தில் எற்பட்ட தவறுகளே நாம் இன்று பலம் இழந்து நிற்பதன் சூத்திரம் ஆகும்.

தமிழீழ விடுதலை புலிகள் தவிர்ந்த மாற்று இயகங்கள் முஸ்லீம் சமூகத்தையோ அல்லது வடக்கு கிழக்கில் வாழந்த சிறு தொகை சிங்கள் மக்களையே இல்லாது ஒழிப்பதன் மூலம் தமது போராட்டத்தை வெல்லலாம் என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படவில்லை. ஆனால் இவ் அமைப்புக்களின் உறுப்பினர்கள் சிலர் இவ் மக்களுக்கு எதிராக செயற்பட்டது எல்லா விடுதலை அமைப்புக்களும் ஒரே மாதிரியாகவே இவ் மக்களை அணுகினர் என்ற வரலாற்று திரிபுவாதக் கருத்திற்கு வருவது பிழையானது ஆகும். இதன் அர்த்தம் இத்தவறுகள் நியாமானவை என்பது அல்ல. இதற்கான பிராயச்சித்தங்களை, விமர்சனங்களை சம்மந்தப்பட்டவர்கள் செய்ய வேண்டும் என்பது ஆகும். இவரின் இத் தவறுகள் கழுவப்படவேண்டும். இதன் மூலமே முஸ்லீம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட இந்த ஆறாத ரணத்தை ஆற்ற முடியும். இதற்காக சம்மந்தப்பட்டவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

கூடவே ஏ9 பாதை திறந்தவுடன் மேளதாளங்களுடன் விரட்டியடிக்கப்பட்ட அந்த மக்களை அழைத்து வந்து சம்பிரதாயங்களுக்கு எற்ப அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த யாழ் மண்ணில் குடியேற்றத்தை ஆரம்பித்திருந்தால் நம்பிக்கைகளை எற்படுத்தி வடுக்களை நீக்க வாய்ப்புக்கள் நிறைய ஏற்பட்டிருக்கும். இதனை பல நலன் விரும்பிகள் 2009 மே மாத யுத்த முடிவின பின்பு உடனடியாக முன்வைத்தனர் மத்தியிலும், மாநிலத்திலும் ஆண்டவர்களுக்கு இதனைச் சீர்தூக்கிப் பார்க்க அன்று நேரங்கள் இருக்கவில்லை போலும். வடுவைநீக்கும்நன்மருந்துகளில்ஒன்றை பரீட்சித்து பார்க்க முடியவில்லை.

தொடர்ந்தும் முஸ்லீம் மக்கள் எம்முடன் இணைய வேண்டும் என்ற மேலாதிக்க கருத்தை, நாமும் முஸ்லீம் மக்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற ஐக்கிய முன்னணி வேலைத்திட்டத்தை தவிர்த்து முன்வைத்தனர். தமக்கு கீழ் இணைய மறுத்தவர்களை இறுதியில் துரோகிகள் என்றும் கூறினர். இதன் மூலம் சிறுபான்மையினருக்குள் இன்னொரு பெரும்பான்மையினர் என்ற மேலாதிக்க செயற்பாட்டை மேற்கொண்டும் வருகின்றனர்.

மறு புறத்தில் முஸ்லீம் பாராளுமன்றத் தலைமைகளும் அரசுடன் இணைந்து அனுசரித்து சலுகைகள் பெறுதல் என்பதில் இருக்கும் நம்பிக்கை உரிமை மறுக்கபபட்டவர்களுடன் இணைந்து போராடுதல் என்பதில் இருப்பதாக தெரியவில்லை.

பிரிந்து நின்று உரிமைகளைப் பெறுதல் என்பதில் நாம் இறுதியில் மேலும் பலவீனப்பட்டு இல்லாமல் போய் விடுவதற்கான வாய்புகளே அதிகம் என்பதை வடக்கு கிழக்கு வாழ் அரசியல் தலைமைகள் புரிந்து செயற்பெறவேண்டும். மக்கள் தயாராக இருக்கின்றனர் இணைந்து போராடுவதற்கு அரசியல் தலைவர்கள் தயாரா? என்பதே இன்றைய கேள்வி..?

**-சிவா ஈஸ்வரமூர்த்தி-**

**PRIVATE TUITION CLASSES**

Math: Grade 9,10,11 and 12

Physice: Grade 11 and 12

Call : SIVA

**416.271.8467**

**416.265.9138**

என் எண்ணத்தில் இருந்து...

# பெற்றோரைப் பொறுப்பெடுத்தல் (Parents Sponsorship) மாற்றம் காணுமா?

நமு பொன்னம்பலம்




தற்காலிகமாகத் தடையை எதிர் நோக்கியுள்ள பெற்றோரின் பொறுப்பெடுத்தல் முறையில் மாற்றங்கள் கொண்டு வரலாமா என குடிவரவுத்துறை ஆலோசனை கலந்து வருவதாக செய்திகள் வெளிவருகின்றன. இதன் பொருள் பெற்றோரை பொறுப்பெடுத்தல் முழுமையாக பழைய நிலைமைக்கு திரும்பும் என்று எதிர்பார்க்கலாகாது. மாறாக தற்காலிக நிறுத்தத்திற்கு உள்ளாகிய இத்திட்டம் சில விதி விலக்கிற்கு உள்ளாகி மாற்றம் காணும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதாவது முன்னர் இருந்த நடைமுறைக்கு இத்திட்டம் திரும்பாத போதிலும் சில பெற்றோரை மற்றும் பேரன் பேத்தியினரை வசிப்பிட உரிமையுடன் கனடா வர அனுமதிப்பது பற்றி குடிவரவு அமைச்சர் பரிசீலித்து வருகின்றார். தற்போது நடைமுறையில் உள்ள சூப்பர் விசா ஒரு புறம் இருக்க மறு புறத்தில் சில நடை முறை மாற்றங்களை ஏற்படுத்தலாமா? என கனடிய குடிவரவு துறை ஆராய்வதாக தெரியவருகின்றது,

இதன் பிரகாரம் கீழ்வரும் பகுதிகளில் விதி விலக்கு அளித்து மாற்றங்கள் ஏற்படலாம்.

பொறுப்பெடுத்தலுக்கு தங்களை முன் நிறுத்தும் கனடியப் பிரஜைகள் மற்றும் கனடிய நிரந்தர வசிப்பிட வாசிகள் போன்றோரின் தகுதிக்குரிய வருவாய் எதிர்பார்ப்பை மேலும் அதிகரிப்பதுடன் பெற்றார் அல்லது பேரன் பேத்தியினர் கனடாவிற்குள் புகும் பட்சத்தில் ஆயுள் காலம் முழுமையும் அவர்களை பராமரிப்பதற்குரிய ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தல்.

அதே போல ”நியாயப்படுத்தக் கூடிய குடும்ப நிலைகள்” (Balance of family test ) அதாவது இந்த ஆலோசனைகளின்படி ஓர் குடும்பத்தில் பாதிக்கும் மேலான பிள்ளைகள் அல்லது குடும்ப அங்கத்தவர்கள் கனடாவில் பிரஜா உரிமை அல்லது கனடிய நிரந்தர வசிப்பிட உரிமை உள்ளவர்களாக வாழும் இடத்தில் மட்டும் பொறுப்பெடுத்தலுக்கு தகுதி உடையவர் ஆவர்.

அதே போல பிரஜைகளை மட்டும் பொறுப்பெடுத்தலுக்கு தகுதி உரியவர் ஆக்குதல். தற்போது கனடிய நிரந்தர வசிப்பிட உரிமை உள்ளவர்களும் பொறுப்பெடுத்தலுக்கு தகுதி உரியவர் ஆக உள்ளனர்.

இவற்றை விட ”விதி விலக்குகளை” இச் சட்டத் திருத்தத்தில் ஏற்படுத்தவும் ஆலோசித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இதன்படி தனியே வாழ்கின்ற அல்லது விதவைகளாக உள்ள பெற்றோர் அல்லது பேரன் பேத்தியினரை விதி விலக்காகக் கருதி சட்டத்தில் இவர்களுக்கு இடமளிப்பது பற்றி அமைச்சு ஆலோசிப்பதாக தெரிய வருகின்றது.

கனடிய பிரஜைகள் மட்டத்தில் மாற்றங்கள் அவசியம் என்று புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ள காரணத்தால் இந்த மாற்றங்கள் அவசியம் என அமைச்சர் தெரிவித்து வந்துள்ளார்.

சுமார் ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் கோவைகள் தாண்டி காத்திருப்பில் உள்ள பல கனடியர்களுக்கு புதிய பெற்றோரை பொறுப்பெடுத்தல் என்ற திட்டம் மாற்றங்களோடு வரும் பட்சத்தில் பொறுப்பெடுத்தலுக்கு ஏங்கும் பலரின் ஏக்கம் நிறைவேறுமா? என்ற சந்தேகம் அநேகர் மனங்களில் ஊசலாடுகின்றது.

பல்வேறு மாற்றங்களை உருவாக்குகின்ற குடிவரவுத் துறை புதிய குடிவரவாளர்களை அவர்தம் குடும்பங்களை இணைய வைக்குமா? என்று ஏங்க வைக்கின்றது.

குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி



## சைக்கிள் கடையும்...

பின்புறத்தில் இடியாத குறையில் ஒரு பெரிய அறை சைசில் ஒரு கட்டடம். அந்தக் காலத்தில் குதிரை வண்டில்கள் நிறுத்திய கராஜ் அது. இது பிரதான வீதிகள் எதற்கும் அகப்படாமல் விலாசம் பிடிக்க முடியாத ஒரு ஒடைக்குள், தெருவோரக் கடையின் கொல்லைப் புறமாய் இருந்தது. இது ஒரு சைக்கிள் கடை.

கதவு எப்போதும் மூடியிருந்தது. உள்ளே எப்படி இருக்கும் என்று ஒரு நாளும் கண்டதில்லை. ஆனால் இந்த சைக்கிள் கடைக்குப் பெயர் சினி சைக்கிள். இங்கே சைக்கிள் திருத்துவதுடன், கடைக்காரர் கலைத் திரைப்படங்களில் ஆர்வம் கொண்டவராய் இருந்தார். (அட, விஜே சைக்கிள் கடைக்காரர்?)

இவரது சைக்கிள் கடைக்குள் சிறிய புரொஜெக்டர்களில் பழங்காலத்துத் திரைப்படங்களைத் திரையிடுவார். அதில் ஒரு படம் தான், சல்வடோர் டாலியும் சேர்ந்து எடுத்த Un Chien Andalou ( An Andalusian Dog) என்ற படம். 1929ல் எடுக்கப்பட்ட மௌனப்படமான இது மிகவும் பிரபலமானது. எந்த விதக் கதையும் இல்லாமல் தொடர்பில்லாத படங்களின் தொகுப்பு அது, டாலியின் ஓவியம் போலவே. இதில் முதல் காட்சியில் ஒரு பெண்ணின் கண் சவரக் கத்தியால் வெட்டப்படும் காட்சி புகழ் பெற்றது.

இந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் என்பது கியூறியஸின் நீண்ட நாள் ஆசை. கலைப்படம் பார்க்க வேண்டும் என்ற ஆசை புத்திஜீவிகளுக்கு மட்டும் தான் வர வேண்டிய கட்டாயம் இல்லையே. ஆனால் கியூறியஸ் மனதில் பெரும் பயம். இவ்வாறான படங்களைப் பார்ப்பவர்கள் குயீன் வீதியில் உலவுகின்ற, மோசமான போதைப் பொருட்களைப் பாவித்து மோனநிலையில் மோசமான கொலைகளைச் செய்யக் கூடியவர்கள், தோல் தலையர்கள், வெள்ளையின மேலாதிக்க வெறியர்கள் என்ற என்ற பயம் அடி மனதில். ஹிட்லரின் நியூரம்பேர்க் ஊர்வலப் படமும் அங்கு திரையிடப்பட்டது ஒரு காரணம்.

இலங்கை அகதி ஒருவர் சைக்கிள் கடையில் கோரக் கொலை என்றெல்லாம் செய்தி வரக் கூடும் என்ற பயத்தில் அந்தப் பக்கமே கியூறியஸ் தலை வைத்துப் படுக்கவில்லை. பின்னால் இணையத்தில் அந்தப் படத்தைப் பார்த்து ரசித்தான்.

டிஜிட்டல் சினிமா வந்து, படச்சுருளிற்கான மவுசு போய், கியூறியஸ் வேலை செய்த நிறுவனம் இன்று மூடப்பட்ட நிலையில், ஒரு கால் நூற்றாண்டின் பின்னாலும் இந்தச் சைக்கிள் கடை 80 பேர் உட்கார்ந்து திரைப்படம் பார்க்கும் சினிமாக் கொட்டகையாக இன்றும் கலைப்படங்களை திரைப்படச் சுருள்கள் மூலம் திரையிடுகிறது. சைக்கிள் கடையோடு கோப்பிக் கடையும் இணைந்திருக்கிறது. அத்துடன் பல திரைப்படங்களின் 35, 16 மில்லி மீட்டர் சுருள்களையும் முழுமையாக விற்பனை செய்கிறது.

ஆனால் சல்வடோர் டாலியின் படம் இன்று அங்கு திரையிடப்படுவதில்லை. அந்தப் படத்தை நீங்கள் பூபாளம் இணையத் தளத்தில் பார்வையிடலாம்.

ஆனால், பூபாளம் இணையத் தளத்தில் நாங்கள் சைக்கிள் திருத்த வேலைகள் செய்வதில்லை. ■

(டாலியின் ஓவியம் கீழே)




உங்கள் முக்கிய ஆவணங்களையும் படங்களையும் மிகவும் மலிவு விலையில் லமினேட் செய்து கொள்ள...

**Palm Print**

1345 Morningside Ave #8

Photocopies From 4 cents


# வகைபடு சிறு விளம்பரங்கள்


**Affordable Personal, Corporate Tax, and Bookkeeping Services**
Call Kenga : 647-400-3973

**Looking for a French Teacher?**
In Mississauga -
All level of French
Call Theepa: 647-924-5657

**QUALITY HOME TUTOR**
Kindergarten – Grade 8
ONE-on-ONE tutoring
Reading , Language Art/English,
Math, Science, Social Studies
**call (647) 284 – 8426**

**Private Tuition Classes**
Math: Grade 9, 10, 11 and 12
Physics: Grade 11 and 12
Siva
**416 271 8467**
**416 265 9138**

**Basement For Rent**
ஒரு படுக்கையறை, ஹோல், சமையலறையுடன் கூடிய நிலக்கீழ் வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. நீல்சன்&ஷெப்பேர்ட் பஸ் தரிப்புகளுக்கு மிக அருகில்.
**647-344-0188**

**Basement For Rent**
இரண்டு படுக்கையறைகள், சமையலறையுடன் கூடிய நிலக்கீழ் வீடு வாடகைக்கு உண்டு. புதிதாகப் புனரமைக்கப்பட்ட இந்த வீடு மூன்று ஆரம்ப பாடசாலைகளுக்கு அருகில் உள்ளது. பஸ் தரிப்பிடத்தில் இருந்து இரண்டு நிமிட தூரத்தில் உண்டு.
91 Jarwick Dr
On Bellamy between Lawrence/Ellesmere
**647-273-7340 (Siva)**

**FOR RENT**
Neilson and Sheppard
(Near Malvern Mall)
Comfortable Location.
Beautiful 3 Rooms Townhouse
for immediate rental.
**Call : 647 969 0175**

# சைக்கிள் கடையும் சல்வடோர் டாலியும்

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன தொடர்பு? என்ற கேள்வி தமிழ்கூறு நல்லுலகில் இன்னமும் பதில் அளிக்கப்படாத இரண்டாவது கேள்வி.

முதலாவது கேள்வி, தேசியத் தலைவர் உயிரோடு இருக்கிறாரா? என்பது.

மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகின்ற இணையப் பிரகிருதிகளும், ஊடகப் பெருச் சாளிகளும் அங்கும் இருக்கலாம், இங்கும் இருக்கலாம் என்று, வரும், ஆனால் வராது என்ற பாணியில் கயிறு திரித்தாலும், மேதகு தேசியத் தலைவர் அவர்கள் எங்கள் இதயங்களில் நீக்கமற நிறைந்திருப்பதால், காணாமலே விசுவசிக்கும் பாக்கியவான்களுக்கு இந்த ஆதாரங்கள் எதுவும் தேவையில்லை.

பொருத்தமில்லாத விடயங்களை இணைக்கும் முயற்சிக்கான கேள்வி தான், அமாவாசை அப்துல் காதர் கதை. சைக்கிள் கடைக்கும் சல்வடோர் டாலிக்கும் கியூறியஸ் முடிச்சுப் போடுவது, நம்ம இணைய, ஊடக வித்துவான்கள் மாதிரி, காதில் பூ(பாளம்) வைப்பதற்காக இல்லை.

நமது ஊரெல்லாம் ஆங்காங்கே சந்திகளில் காணப்படும் சைக்கிள் கடைகள் எல்லாம் எங்கள் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் அழியாத கோலங்கள். தென்னோலைக் குடிசைகளாயும், அகன்ற கதவுக் கடைகளாயும் இருந்த இந்தச் சைக்கிள் கடைகளின் அருமை, எங்காவது கொதிக்கும் வெயிலில் சைக்கிள் காற்றுப் போய் உருட்டிக் கொண்டு போகும் போது தான் தெரியும். அதிலும் போகும் வழியில் பஸ்ஸிற்காய் காத்து நிற்கும் பெண் பிள்ளைகளைக் கடந்து போகும் போது, அவமானம் பிடுங்கித் தின்னும்.

டாக்சி, பொலிசார் போல, உங்களுக்குத் தேவைப்படும்போது இந்தச் சைக்கிள் கடைகளும் அகப்படாது. பாலைவனத்திற்கு நடுவில் இருக்கும் நீர்ச் சுனைகள் போல, ஆபத்பாந்தவனாய் வந்து மானம் காக்கும் இந்த சைக்கிள் கடைகள் தனிச் சிறப்பானவை.

ஓரமாய், தடித்த மட்டையில், எழுத்துப் பிழைகளுடன், பூபாளம் மாதிரி, ‘காற்றடிக்க 25 சதம்’ எழுதி சுவரிலோ, வேலியிலோ அறிவித்தல் தொங்கும். சில நேரங்களில் கறள் பிடித்த தகரத்தில் சுண்ணாம்பில் நிரந்தரமாய் எழுதிய அறிவித்தல்களும் உண்டு. உலகம் முழுக்க காற்று இருக்கிறதே, அடிப்பதற்கு எதற்கு 25 சதம் என்றா கேட்க முடியும்? கேட்டால் வீடு வரைக்கும் அவமானம் பிடுங்கித் தின்ன நடக்க வேண்டியது தான். அடிக்கும் காற்று சோளகமா? கொண்டலா? வாடையா? என்று வித்துவத்தைக் காட்டப் போனால், ஆபத்து அந்தரத்திற்கு கடைப் பக்கம் தலை காட்ட முடியாமலும் போகலாம்.




அதற்கு அருகில் சாத்தியபடி இருக்கும், இந்தக் காற்றடிக்கும் பம்பு. அதை அவரும் அடித்து விட மாட்டார். நீங்கள் காற்றடிப்பதற்கு அவரது கருவியின் வாடகை மட்டுமே அது. அதிலும் வழுக்குவதற்கு வசதியாக எண்ணெயோ, கிறிஸோ பூசியிருக்க, எங்காவது வெள்ளைக் காற்சட்டையுடன் காற்றடிக்க நேர்ந்தால், தொடைப் பக்கமாய் மறக்காமல் அந்தப் பம்பு கரிபூசும். அல்லது பிடிக்கும் குழலுக்கும் இடையிலான கம்பிச் சுருள் தொடையில் தசையை நசித்தும் மயிரைப் பிடுங்கியும் துன்பம் தரும்.

அதுவும் நீங்கள் சும்மா ஏறி மிதிக்க காற்று டயருக்குள் ஏறாது. அதற்கும் ஒரு டெக்னிக் உண்டு. மெதுவாக அழுத்தி, கடைசியில் ஒரு வேகமான குறுகிய அழுத்தல் தான் காற்றை உள் நுழைக்கும். இது கியூறியஸ் போன்ற பையல்களுக்கு கை வராத டெக்னிக். அழுத்திக் கொண்டே இருக்கலாம். காற்று ஏறாது.

கியூறியஸ் சைஸ் பையல்கள் போன்றே, பாடசாலைப் பெண்களுக்கும் இது கை வராது. இதனால் தங்கள் புஜவலிமை காட்ட, சைக்கிள் கடை அண்ணையுடன் பேச்சுக் கொடுத்தபடியே ஒரு கூட்டம் நசியும். பெண்கள் வந்ததும், காற்று நிறைக்க புஜவலிமைப் பயில்வான்களுக்குள் போட்டியே நடக்கும். ஒரு தாங்க்ஸ்க்கும் சிரிப்புக்குமாய் இந்தக் கூட்டம் வழியும்.

சில நேரம் பெண் சிரிப்பில் வழிந்த அண்ணாச்சி, பெண் பேசாமல் போக, தன் பொக்கட்டில் இருந்தே 25 சதத்தை ஈகை செய்வார். இல்லாவிட்டால், கடைக்காரரின் திட்டுக்கு ஆளாக வேண்டி வருமே!

காற்று நிறைத்தவர் மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் திரும்பிப் பார்க்க... மற்றவர்கள் மனம் குமுறுவர்.

என்ரை ஆள் வரட்டும். அடுத்த தரம் காட்டுறன் உவருக்கு..!

இவர்கள் காத்திருக்கும் பெண் காற்றுத் தேவையில்லாமல் வாயு வேகத்தில் தலை மறைவாள்.

சைக்கிள் கடையில் சைக்கிள் வாடகைக்கும் கிடைக்கும். மணித்தியாலக் கணக்கில்! அதற்கும் தனியான எழுத்துப் பிழை அறிவித்தல் இருக்கும். வாடகைச் சைக்கிள் வாங்கியவர் கொடுத்த பணத்திற்காக, காடு மேடெல்லாம் நன்றாய் போட்டடித்த பின் கொண்டு வந்து சேர்ப்பார், பவ்வியமாக!

வேலைக்காய் காத்திருக்கும் சைக்கிள்கள் வேலியில் சாத்தி வரிசையாய் இருக்கும்.

மறக்காமல் ஒரு நெளிந்த அலுமினியச் சட்டி, பானை அல்லது வாளி. வீட்டில் மனைவி சமையலறையில் பயன்படுத்தி தூக்கி எறிந்தது, பிடி வளையம் பிய்ந்திருக்கும். கல்வனைஸ்ட் வாளி அடிபட்டு நெளிந்திருக்கும்.

இரண்டுக்குள்ளும் கலங்கி மண் நிறைந்த தண்ணீர். காலை கடை திறக்கும்போது நிரப்பியது. கடை மூடும் வரைக்கும் சேறு படிந்திருக்கும். சில நேரம் கிழமைக் கணக்காயும் இந்த நீர் மாறாமல் இருக்கும்.

இறைச்சிக்கடையில் கூரையிலிருந்து தொங்கிய கயிறுகளில் ஆடும் உரித்த ஆடுகள் போல, சைக்கிள்களும் முன்புறமோ, பின்புறமோ தூங்கி தொங்கும்.

கீழே டயரைப் பிடித்திருக்கும் றிம்மின் நெளிவு சுழிவுகளைக் கண்டுபிடிக்க, மரக்கட்டையில் இறுக்கிய ஸ்போக் ஒன்று. அதில் றிம்மை வைத்து, கம்பிகளின் நீளத்தைக் கூட்டிக் குறைத்து, றிம் நேராக்கப்படும்.

பிய்ந்த வால்வ் டியூப், அல்லது டயரில் குத்திய முள் அல்லது ஆணி என வழமையான திருத்த வேலைகள். நீள வால்வ் டியூப்பில் வெட்டிய துண்டுடன் வேலை முடியும். அல்லது சத்திர சிகிச்சை.

காற்றை நிரப்பி, நீரில் அமிழ்த்தி, குமிழ் பார்த்து துளை தேடி, ஏற்கனவே நொய்ந்த இன்னொரு டியூப்பில் வெட்டிய துண்டை ஒட்டும் பசை பூசி ஒட்டி, இன்னொரு தடவை நீரில் அமிழ்த்தி என சிகிச்சை தொடரும். பிய்ந்த, வெடித்த டயர்களுக்கும் நொய்ந்த டயர்களின் துண்டுகள் வைத்து நைலோன் கயிற்றுத் தையலும் நடக்கும்.

இதையும் விட, வருடாந்த பராமரிப்பாய், எண்ணெயில் கழுவிப் பூட்டி, உடைந்த உருண்டைகளை மாற்றி, கிறிஸ் பூசி, மிருதுவான ஓட்டத்திற்கு தயார் செய்தலும் நடக்கும்.

அதிருக்கட்டும், ஆரண்ணை அந்த சல்வடோர் டாலி? எந்தச் சந்தியில சைக்கிள் கடை வைச்சிருந்தவர்?

அவசரப்படாதீங்கப்பா. இந்த சைக்கிள் அலுவல் முடிந்த பின்னால் தான் உங்கள் கேள்விக்குப் பதில்.

தொழில் தர்மம். வந்த வரிசைப்படி தான் அலுவல் முடிக்கப்படும்.

ஒவ்வொரு கடையும் இன்னாரின் கடை என்றே ஊரில் அறியப்படும். மற்ற ஸ்டோர்கள் போல, வண்ணத்தில் எழுதிய பெயர்ப் பலகை எதுவும் இல்லாமல், வெறும் கடைகள் இவை. கிராமங்களில் உட்புறங்கள், சந்திகளில் தவறாமல், நகருக்குள் நெடுந் தொலைவுகளில் என எங்கும் காண்பவை இவை. சில நேரங்களில் உதிரிப் பாகங்கள் கூட இருப்பில் இருக்காது. நீங்கள் தான் பலசரக்குக் கடைகளில் வாங்கிக் கொண்டு போய் கொடுத்து திருத்துவிக்க நேரிடும்.

காலையில் முற்றம் கூட்டி சந்தனம் தெளித்து சாமி கும்பிட்டு விளக்கேற்றி வியாபாரம் தொடங்கக் கூடும். சாமிப் படத்திற்கு அப்பால், எம்.ஜி.ஆர், அண்ணாதுரை படமும் இருக்கும். எம்.ஜி.ஆர் அதில் மேசையில் உட்கார்ந்து திருக்குறள் படித்துக் கொண்டிருப்பார். எம்.ஜி.ஆருக்கு பின்னால் நேதாஜி படத்தில் இருப்பார். இதெல்லாம் போட்டோ அல்ல, வரைந்த ஓவியம் தான்.

சில நேரம் மதுரையில் ஏதோ லித்தோ அச்சகத்தில் அடித்த எம்.ஜி. ஆர் படப் போஸ்டரும் இருக்கும். ரிக்‌ஷாக்காரன்? வாத்தியார் ஏன்




சைக்கிள் கடை ஓனராக மட்டும் நடிக்காமல் விட்டாரோ தெரியாது?

சிறிய முதலீட்டுடனும் அனுபவம் தேவையில்லாமலும் தொடங்கக் கூடிய தொழில் முயற்சி அது. வாழ்நாள் பூராகச் செய்வதாயோ, அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்வதாயோ இல்லாத தொழில்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் கடைக்காரர் வேறு தொழில் செய்யப் புறப்பட்டு விடுவார்.

இதற்கு ஒருவர் எங்கோ தத்துவம் சொன்னார், நேரில் கேட்ட ஞாபகம், எங்கே என்பது நினைவில்லை. புறங்கையால் அடி வாங்குவது அவமானமாம். அதைப் போல, செருப்பு, டயர் போன்றன புறப் பக்கம் பயன்படுவனவாம். அந்தத் தொழில் செய்வோருக்கு தரித்திரமாம்.

இதனால் தான், இவர்கள் நிரந்தரமாய் இதே தொழில்களில் இருப்பதில்லையோ?

நம்ம ஊரில் ராசகுட்டியர் இருந்தார். தன்னுடைய சகோதரனின் கடையைப் பார்த்து, தானும் திறந்தார். ஆனால் இவருக்கோ புதுமையாகச் செய்ய வேண்டும் என்ற ஆசை. கார் கராஜ்களில் காருக்கு கீழே மெக்கானிக்குகள் சாக்கை விரித்து திருத்த வேலைகள் செய்வதைப் பார்த்து... தானும் சைக்கிளைக் கட்டித் தூக்கி விட்டு, சாக்கை விரித்து படுத்திருந்து திருத்தியதாகச் சொல்வார்கள்.

இன்னொரு சைக்கிள் கடைக்காரர் சந்தியில் கடை வைத்திருந்தார். சோட் பாலா என்ற பெயரில். இவரும் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்தில் தொடர்புபட்டு, பொலிசாரால் தேடப்பட்டு சுவரொட்டிகளில் படம் வந்தவர். ஐயர் எழுதிய புத்தகத்தில் இவரைப் பற்றியும் குறிப்பிடப்பட்ட ஞாபகம். இவரை கியூறியஸின் அண்ணன்மாருக்குத் தெரியும். கியூறியஸ்க்கு தெரியாது.

இப்படியாக ஊருக்கு ஒரு சைக்கிள் கடைக்காரர், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதை இருக்கும். சோட் பாலா மாதிரி வரலாற்றில் இடம் பெற்றவர்களும் ராசகுட்டியர் மாதிரி கியூறியஸால் பெருமை பெற்றோரும் என இவர்கள் வரலாற்று நாயகர்கள் தான்.

சரி, சல்வடோர் டாலிக்கு வருவோம். இவர் ஒன்றும் சைக்கிள் கடைச் சொந்தக்காரர் இல்லை. இவர் ஒரு புகழ் பெற்ற ஸ்பானிய ஓவியர். இவரது ஓவியங்கள் பார்ப்பவர்களைக் குழப்பும். தங்களை புத்திஜீவிகள் என்று நினைப்பவர்கள் இவருடைய ஓவியங்களைப் புரிந்து கொண்டது போலவும், மற்றவர்களுக்கு இதெல்லாம் புரியாது என்றும் புலுடா விடுவார்கள்.

இவருக்கும் சைக்கிள் கடைக்கும் கியூறியஸ்க்கும் தொடர்பு நிறைய உண்டு.

கியூறியஸ் திரைப்படச் சுருள் உற்பத்தி நிறுவனத்தில் வேலை செய்த கதை பலருக்கும் தெரிந்திருக்கலாம். இந்த நிறுவனம் நகர் மையத்தில் இருந்த நூற்றாண்டுப் பழைய கட்டடத் தொகுதிக்குள் இருந்தது. இதன்

14ம் பக்கம்...

## பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று சட்டமூலங்களின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது

# உயர்நீதிமன்றம் தீர்ப்பு



நன்றி: The Sunday Leader

**தாயகத்திலிருந்து விஜய்**

திவிநெகும (மக்கள் எழுச்சி) சட்டமூலம், நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம். குற்றவியல் நடைமுறைக் கோவை சட்டமூலம் ஆகிய சட்டமூலங்களிலுள்ள சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என உயர்நீதிமன்றம் பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளது. பாராளுமன்றத்தில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ள இந்தச்சட்டமூலங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் ஆராய்ந்து அதன் தீர்ப்பினை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்திருந்தது. உயர்நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தீர்ப்பினை நேற்று (10.11.2012) சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் சபாநாயகரால் அறிவிக்கப்பட்ட திவிநெகும சட்ட மூலம் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பில், அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் வடமாகாண சபை இதுவரையில் நிறுவப்பட்டிருக்கவில்லை. ஆதலால் அதன் அபிப்பிராயத்தினை பெற முடியாதிருப்பதால் இந்தச் சட்டமூலமானது அரசி யலமைப்பின்படி விசேட பெரும்பாண்மை மூன்றில் இரண்டு வாக்குகளால் மாத்திரமே நிறைவேற்ற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரண்பட்டிருப்பதால் சர்வசன வாக்கெடுப்புக்கும் விடப்பட்டு மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் உயர்நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள உயர்மன்றத் தீர்ப்பில், அதன் இரண்டு சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணாக அமைந்திருப்பதனால் முரண்பட்டுள்ள சரத்துக்களை திருத்தம் செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரால் பாராளுமன்றத்தில அறிவிக்கப்பட்ட குற்றவியல் நடைமுறைக் கோவை சட்ட மூலம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள உயர்மன்றத் தீர்ப்பில், சரத்துக்களில் ஒன்று அரசியலமைப்புக்கு முரணாக இருப்பதனால் அது மூன்றில் இரண்டு பெரும்பாண்மை வாக்குகளாலாயே நிறைவேற்றமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலங்கள் தொடர்பில் ஏதெனுமொரு சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தின் ஒழுங்குப்பத்திரத்தில் உள்வாங்கப்படுமானால் அவ்வாறு உள்வாங்கப்படுவதற்கு முன்னதாக குறித்த விடயம் அரசியலமைப்புடன் இணக்கப் பாட்டுத்தன்மை மற்றும் செயன்முறையின் இணக்கத்தன்மை குறித்து ஆராய்வதற்கும் அது தொடர்பிலான தீர்மானம் ஒன்றை வழங்குவதற்கும் உயர் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் உயர்நீதிமன்றம் விசாரித்து தீர்ப்பினை வழங்கியிருக்கிறது.

ஏற்கனவே நீதித்துறைக்கும் நிறைவேற்றதிகாரத்திற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்த நிலையில் உயர்நீதிமன்றம் பாராளுமன்ற சட்டமூலங்கள் தொடர்பில் விசாரித்து எதிரானதொரு தீர்ப்பினை வழங்கியிருக்கிறது.

பாராளுமன்றத்தின் அதிகாரங்களில் உயர்நீதிமன்றம் தலையிடுகிறது என்று அரசாங்கத்தரப்பினர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்த நிலையில், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு எதி ராக 14 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய அரசியல் குற்றவியல் பிரேரணை ஒன்றை அரசாங்கத் தரப்பினர் பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கிறார்கள். அரசாங்க சார்புடைய 117 பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ள இப்பிரேரணையில், பிரதம நீதியரசர் பதவியிலிருந்து ஷிராணி பண்டாரநாயக்காவினை நீக்குவதற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

# நீதித்துறையில் அரசு தலையீடு

## உயர்நீதிமன்ற நீதியரசரை பதவி நீக்க முயற்சி

உயர்நீதிமன்ற நீதியரசர் கலாநிதி ஷிரானி பண்டாரநாயக்கவை பதவியிலிருந்து நீக்கும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது. மே 2011ல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட இவர் மீது, வருமானத்தை தெரியப்படுத்தாதது, பதவியை துஷ்பிரயோகம் செய்தது உட்பட 14 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

நீதித்துறையில் அரசு தலையீடு இருப்பதாக பிரதம நீதியரசர் குற்றம் சாட்டியதினால் கோபம் அடைந்த ஜனாதிபதி தரப்பினர், பிரதம நீதியரசர் தனது அதிகார வரம்புகளை மீறி விட்டார் எனக் குற்றம் சாட்டத் தொடங்கினர். இதன் எதிரொலியாகவே இந்த பதவி நீக்க முயற்சி நடைபெறுகிறது.

முறையற்ற நடத்தை என்ற குற்றச்சாட்டில் அவரை பதவி விலக்க வேண்டும் என்று ஆளும் கட்சியின் 117 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, கொண்டு வந்த



நன்றி: colombotelegraph

தீர்மானத்தை சபாநாயகர் சமால் ராஜபக்ச ஏற்றுக் கொண்டார். இப்போது பிரதம நீதியரசர் குறித்த விசாரணையை மேற்கொள்ள சபாநாயகர் ஏழு பேர் கொண்ட குழு ஒன்றை நியமிப்பார்.

அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டுப் பெரும்பான்மை இருப்பதால், நீதியரசரை பதவி விலக்குவதில் அரசுக்கு சிரமங்கள் இருக்காது.

இதற்குள் பத்திரிகைகளில் தனது நிதி விவகாரங்கள் தொடர்பாக வந்த செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்து, நீலகண்டன் அன்ட் நீலகண்டன் சட்ட நிறுவனத்தின் ஊடாக பிரதம நீதியரசர் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

# யுத்தக் குற்றம் பற்றி ஆராய

## நவநீதம் பிள்ளை இலங்கை வருகிறார்

மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகர் நவநீதம் பிள்ளை அடுத்த தை மாதம் யுத்தக்குற்றங்கள் பற்றிய விசாரணை குறித்து ஆராய இலங்கை வர உள்ளதாக தெரிவித்திருக்கிறார். ஸ்டாலின் தலைமையிலான இரண்டு பேர் கொண்ட குழு ஒன்று ஜெனிவாவில் வைத்து நவநீதம்பிள்ளையைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்தனர். அப்போது அவர் இதைத் தெரிவித்தார் என்ற தி.மு.க வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டி.ஆர்.பாலு உடன் சென்ற ஸ்டாலின் டெசோ மாநாட்டின் தீர்மானம் பற்றிய அறிக்கை ஒன்றைக் கையளித்து, இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்து 35



நன்றி: acnudh.org

நிமிடங்கள் பேசியதாகவும் தி.மு.க அறிக்கை தெரிவித்தது.

இலங்கையில் மனித உரிமை மீறல் குறித்து ஐ.நா செயலாளர் நாயகம் பான் கி மூனுடன் சேர்ந்து ஆலோசித்து முடிவு ஒன்று எடுக்கப்படும் என நவநீதம்பிள்ளை உறுதியளித்ததாகவும் தி.மு.கவின் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

---

**மாயை உலகத்து,,,**

செய்ய வேண்டும்” என்பது சட்டம். “இது வேலைசெய்யும்” என்பது விதி. ஒரு திரைப்படத்தைச் சட்டங்களின் படி வடிவமைப்பது என்பது யந்திரத்தனமானது. விதிகளின் நியதிப்படி முகிழ்விப்பதென்பது உயிரோட்டமானது. அந்தத் திரைக்கதை விதிகள்தான் என்ன என்று உங்கள் மனதில் எழும் கேள்வி எனக்குப் புரிகிறது.

எல்லாவற்றையும் அடுத்த வாரம் பார்ப்போமே,(வளரும்)

குறிப்பு: சங்கீத ஞானத்துடன் ஒரு பாடலை ரசிக்கும்போது அதன் அற்புதமான அனுபவத்தை நாம் உணர்ந்துகொள்வதுபோல, திரைக்கதை பற்றிய புரிதல் திரைப்பட ரசனையை மேம்படுத்திக் கொள்ள உதவுமென்பது என் எதிர்பார்ப்பு. மறுபுறம் தரமான படங்களைத் தயாரிப்பதற்கேதுவான பக்குவத்தையும் உத்திகளையும் இது படைப்பாளிகளுக்கு உணர்தலாம். திரைக்கதை பற்றிய கேள்விகளிருந்தால் அனுப்பிவையுங்கள். முடிந்தவரை பதிலளிக்கிறேன். வாழ்த்துக்கள்!